விலை சதம் 50 ★ பக்கங்கள்— 8

# ஈழநாடு வார மலர்

*THE EELANADU VARAMALAR*

மலர் 19 | புரட்டாசி 30 | ஜுல்ஹஜ் 2 | ஞாயிற்றுக்கிழமை | [16—10—77] | இதழ் 246

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ்

றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 464

'நீமியா உரம்'

மண்ணை வளம்படுத்தி அதிக நெல் விளைச்சலைக் கொடுக்கும்.

நீமியா உரப் பசளையை வாங்கி உபயோகியுங்கள்.

—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

### புதிய அரசமைப்புத் திருத்தத்தின் மூலம்

# சர்வாதிகாரியாக ஜனாதிபதி மாறும் பேச்சுக்கே இடமில்லை

## பிரபல தமிழ் சட்டத்தரணியின் ஆணித்தரமான கருத்து

[நமது நிருபர்]

"ஜனாதிபதியானவர் அரசாங்க அதிகாரத்தை கைப்பற்றிக்கொண்டு சர்வாதிகாரியாக மாறிவிடக்கூடிய பேச்சுக்கே இடமில்லை. அண்மையில் தேசிய அரசுப் பேரவை மேற்கொண்ட அரசியல்சட்டத் திருத்தம் இப்படியான ஒரு நிலை உருவாகாதவண்ணம் பாதுகாப்பளிப்பதாகவே உள்ளது"

பிரபல சட்டத்தரணியும் முன்னாள் செனட்டர் திரு. எஸ். நடேசனின் புதல்வருமான திரு என். சத்தியேந்திரா இக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

அரசியல் சட்டத் திருத்தப் பிரேரணை அண்மையில் தேசிய அரசுப்பேரவையில் நிறைவேறியது அல்லவா. இத்திருத்தத்தின் மூலம் இப்போதைய பிரதமமந்திரி ஜனாதிபதியென்ற போர்வையில் சர்வாதிகாரியாக மாறப்போகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு மறுப்பு தெரிவிக்கும்வகையில் குறிப்பாக முன்னாள் நீதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் கருத்துக்களை மறுக்கும்வகையில் திரு. சத்தியேந்திரா இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

புதிய திருத்தத்தின்படி அரசியல் சட்டமானது மக்களின் இறைமையை தேசிய அரசுப்பேரவையிடமும், ஜனாதிபதியிடமும் ஒப்படைக்கின்றது. அத்துடன் நிற்கவில்லை, மக்களின் சட்டவாக்கல் உரிமையை தேசிய அரசுப் பேரவையினால் செயல்படுத்தப்படுமென்றும், மக்களின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுமென்றும் 5-வது ஷரத்து வலியுறுத்துகின்றது. தேசிய அரசுப் பேரவையிடம் ஒருவிதமான அதிகாரத்தையும் ஜனாதிபதியிடம் வேறுவிதமான அதி

[8-ம் பக்கம் பார்க்க]

### தேசாய்க்கு எதிராகவழக்கு

புதுடில்லி. அக். 15

நீதிமன்றத்தை அவமதித்ததாக இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு எதிராக வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### இன்று கூடுவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்ற விண்ணப்பப்படிவங்கள் விநியோகச் சம்பந்தமாகவும், இடம்பெயர்ந்த தமிழ் ஆசிரியர்களின் எதிர்கால நடவடிக்கை பற்றி யாராயும் பொருட்டும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட-வெளி மாவட்டங்களின் கிளைச்செயலாளர்களின் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு எண்ணை நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் மன்றப் பொதுச்செயலாளர் திரு. நா. பாலசுப்பிரமணியமும் கலந்துகொள்கிறார்

## பாதிக்கப்பட்ட டாக்டர்கள் பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாதிக்கப்பட்ட டாக்டர்கள் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குத் தங்கள் பிரச்னைகள் பற்றிய மகஜரொன்றைச் சமர்ப்பிக்கவிருக்கிறார்கள்.

இம்மகஜர், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மூலம், பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும்.

இம்மகஜரைத் தயாரிப்பதற்காக இதுவரை வேலைக்குத் திரும்பாத பாதிக்கப்பட்ட டாக்டர்களை இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள 148-ம் இலக்கக் காரியாலயத்தில்கூடுமாறு கோரப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பிரஸ்தாப மகஜர் தயாரிக்கப்படும்

(அ-க)

## தோட்டத்தில் நின்றவர் சுடப்பட்டாராம்

### இளைஞர்கள் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோண்டாவிலில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கி சூட்டிற்கு ரி. பரமசிவம் என்பவர் இலக்கானார். உடனடியாக இவர் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

காயமடைந்தவர் தோட்டத்தில் நின்ற சமயம் மூன்று வாலிபர்கள் சென்று கவவரகால சம்பவம் தொடர்பாக அவரை எச்சரித்தபின் சுட்டதாக இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது.

மூன்று தடவை சுடப்பட்டதாகவும், அவலவர்கள், கூடுமுன்னரே துப்பாக்கி இளைஞர்கள் ஓடிமறைந்துவிட்டதாகவும் இச்சம்பவம்பற்றி மேலும் கூறப்படுகிறது.

கோப்பாய் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைசெய்துவருகின்றனர். இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

[க]

### குருநாகலில் இருந்து பஸ்ஸில்

# பேராதனைக்குச் செல்லும் மாணவருக்குப் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பல்கலைக் கழகத்தின் பேராதனை வளாகத்துக்குச் செல்லும் தமிழ் மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

இங்கிருந்து செல்லும் தமிழ் மாணவர்கள் குருநாகலில் இருந்து பஸ்களில் பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு குறித்து யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் வித்தியானந்தனும், மாணவர் பிரதிநிதிகளும் பெற்றோரும் கவலைகொண்டிருந்தனர்.

பேராசிரியர் வித்தியானந்தன் நேற்று யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. ரன்முத்துகலவுடன் தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டதை அடுத்து பொலிஸ் அதிபர் குருநாகல்பகுதி பொலிசாருடன் தொடர்புகொண்டு மாணவர்கள் பாதுகாப்புடன் பேராதனைக்கு செல்ல ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பொல்காவலையிலும் மாணவர்கள் ரயிலில் இருந்து இறங்கி மாறும்போது இடைஞ்சல் ஏற்படாதவகையில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது

### யாழ். வளாகம் 7-ம் திகதி திறக்கும்

இலங்கை பல்கலைக்கழக யாழ். வளாகம் அடுத்தமாதம் 7-ம் திகதிமுன்றும் தவணைக்காக ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதம் 17-ந் திகதி ஆரம்பமாகுமென முன்னர் தீர்மானித்திருந்தும் நேற்று கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு டி. எம். பி. டி. தஸநாயக்கா பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. டி. பி. எல். சிறிவர்த்தன மற்றும் மாணவத் தலைவர்களிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது நவம்பர் 7-ந் திகதி தொடங்குவதாக முடிவுசெய்யப்பட்டது.

### காங்கிரஸ் கூட்டத்தில்

# சி. எஸ். பேசுகையில் கூச்சல், குழப்பம்

புதுடில்லி, அக். 15

முன்னாள் இந்திய நிதியமைச்சர் திரு. ஸி சுப்பிரமணியம் கலந்துகொண்ட காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் அவர் உரையாற்றியபோது மேடைக்குப் பாய்ந்து சென்ற இந்திரா ஆதரவு உறுப்பினர்கள் ஒலிவாங்கியைப் பறித்ததுடன் பெரும் கூச்சலிட்டு பெரும் அமளி ஏற்படுத்தினர்.

திருமதி காந்திக்கு எதிராக திரு சுப்பிரமணியம் சாட்சியமளித்ததை எதிர்த்தே அவர்கள் இக் குழப்பத்தை ஏற்படுத்தினர் என்று அறிவிக்கப்பட்டது.

திரு. சுப்பிரமணியம் பேசிக்கொண்டிருந்த வேளையில், சுமார் 30 உறுப்பினர்கள் இந்த அமளியை ஏற்படுத்தினர்.

"திரு. சுப்பிரமணியம் சொல்வதைத் தாம் கேட்கத் தயாராக இல்லை" என்றும் கூறிய அவர்கள், அவர் பேசி முடியும்வரை கூச்சலிட்டபடி இந்திரா ஆதரவு கோஷமிட்டிருந்தனராம்.

(இ)

# வரி விளம்பரம்

## தேவை

அனுபவமும் திறமையும் மிக்க கணக்காளர் தேவை. இறுதிக்கணக்குகள் தயாரிக்கும்வரையில் அனுபவம் இருத்தல்வேண்டும். வயது 40க்கும் 45ந்திற்கும் இடைப்பட்டோர் விண்ணப்பிக்கவும். நேரில் அல்லது தபால்மூலம் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். முகாமையாளர்: ஸ்ரான்லி பேர்ண்ச்சிங் மாட், இல. 5, 7. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7385

தனிஆளுக்கு யாழ். நகர சன்பயெல்லைக்குள் பகுதிவீடு அல்லது குளிக்கின்ற அறையுடன் சேர்ந்துள்ள அறை 1-11-77க்கு முன் தேவைப்படுகிறது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல 7407, C/o. ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 7407

வேப்பம்விதை, ஆமணக்கம் விதை, இலுப்பைவிதை, நிலக்கடலை, எள்ளு, இறப்பர்விதை, பருத்திவிதை, தொகையாகவும் சில்லறையாகவும் திருப்தியான விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும். விலைவிபரத்துடன் உடனே தொடர்புகொள்ளவும். பொ(B)பி இன்டஸ்றீஸ், ஆனைக்கோட்டை. (7222)

ஆங்கில சுருக்கு, தட்டெழுத்தில் அனுபவமுள்ளவர் தேவை. 10 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ளவர் பகுதிநேர வேலைக்குக் கடமையாற்றத் தேவை இளைப்பாறியவர் நன்று. நேரில் தொடர்புகொள்ளவும்.— றேயல் மோட்டோர்ஸ், 182, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7406

டிராக்டர் மெக்கானிக்குகள் (Mechanics) இருவர், எலெக்ரிசன் (Electrician) ஒருவர் உடனடியாகத் திருகோணமலையில் தேவை. வயது, தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 7399, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7399

வான்கோழி ஒருசோடி, ஆண்மான் குட்டி அல்லது வளர்ந்ததாகவோ தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.7363 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7363

## விற்பனைக்கு

C. N 9209 சயிற்வால்மைனர் நல்லநிலையில் விற்பனைக்குண்டு. எம். எம். எல்ஸ், நிர். 70. கிருன்பசார், யாழ்ப்பாணம். 7414

6 1/2 பரப்புக்காணி. சகல வசதிகளுடனும் உடனடி விற்பனைக்கு உண்டு. நா. உலகநாதன், 21/5, குமாரசாமி வீதி, கந்தர்மடம். 7410

பெரிய 5 வேப்பம் மரங்கள் விற்பனைக்குண்டு. பெற விரும்புவோர்: த. சுப்பிரமணியம், உரும்பராய் வடக்கு தொடர்புகொள்ளவும். 7404

சாவகச்சேரி நகரத்திற்கு அருகாமையில் மின்சாரவசதிகள் கொண்ட புதிதாக கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு. சிவசுந்தரம், 241, கைலாயபிள்ளை வீதி, சாவகச்சேரி. 7397

இங்கிலாந்திலிருந்து சமீபத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட மொறிஸ் ஒக்ஸ்போசிட் கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; எஸ். சங்கரப்பிள்ளை, சுசிலா ஸ்ரோர்ஸ், 1223, மருதானை வீதி, பொறளை. 7400

தெல்லிப்பளை புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் ஐந்து பரப்புக்காணி விற்பனைக்குள்ளது. விபரங்களுக்கு: விண்ணப்பிக்கவும்: 'விளம்பர இல. 7389, C/o ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம் 7389

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ''ஒலம்பியா'' தமிழ் தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும்: எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 7420

மாவிட்டபுரம் பிரதான வீதியில் சகல வசதிகளுடன் 2½ பரப்புக் காணியும், வீடும் விற்பனவுக்குண்டு. ஸ்ரீமுருகன் ஸ்டோர்ஸ், மாவிட்டபுரம், தெல்லிப்பழை முகவரிக்குத் தொடர்புகொள்ளவும். 7403

நல்ல நிலையில் புதிய பிரேத வண்டில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. வ. கிருஷ்ணபிள்ளை, ஊரெழு கிழக்கு, சுன்னுகம். 7405

திருகோணமலை வடக்கில் இருக்கும் நிலாவெளிப் பகுதியில் விவசாயக் காணி ஒரு ஏக்கர் அல்லது 5 ஏக்கர் துண்டுகளாக விற்பனைக்குண்டு இவங்காயம், மிளகாய் மற்றும் உப உணவுச் செய்கைக்கு மிக உகந்தது. கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 7398, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7398

நல்ல நிலையிலுள்ள 'வெலோசெட்' (Velocette) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்:- 65, டேவிட் றோட், யாழ்ப்பாணம். 7421

வெல்டிங் பிளான்ட் மற்றும் கம்மாலைக்குரிய உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்புகொள்ளவும். உரிமையாளர் S. செல்வராசா, 164, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 7426

33 ஸ்ரீ 2256 ஒஸ்டின் A 55 கேம்பிறிஜ் வான் விற்பனைக்கு. தொடர்பு: வை. தர்மலிங்கம் சிவகுலவீதி, உரும்பிராய்தெற்கு உரும்பிராய். 7423

## வகுப்புகள்

வயலின், குச்சுப்புடி நடன வகுப்புக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை [21-10-77] விஜயதசமியன்று ஆரம்பிக்கப்படும். இவ் வகுப்புக்களில் சேர்ந்து பயில விரும்புவோர் கீழ்வரும் விலாசத்திற்கு உடன் தொடர்புகொள்ளவும். சங்கீதவித்வான், செல்வி கலைவாணி அமிர்தலிங்கம் (சென்னை கர்நாடக இசைக் கல்லூரி] No. 8, 4-வது ஒழுங்கை, பிறவுண் வீதி யாழ்ப்பாணம். 7391

விசேஷ ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம் 22-10-77 ''யோகானந்த இன்ஸ்ரிரியூட்'' 54 விபுலானந்த வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். திறமை எய்துவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும். 7390

லண்டன் [சிற்றியன்ட் கில்ட்ஸ்] எலெக்றிக்கல் என்ஜினியறிங் வகுப்புக்கள் [வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்குரியன]. ஸ்ரீ சத்திய தாஸன், யாழ்ப்பாணக் கல்வி நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7408

வீணை, வயலின், வாய்ப்பாட்டு, மிருதங்கம், நாட்டிய வகுப்புக்கள் தராதரம் பெற்ற ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றது. விபரங்கட்கு: விம்ஸ் இசைக் கல்லூரி, 14, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 7416

---

இலங்கை
மின்சார சபை
மத்தியமின்சாரநிலையம்
சுன்னுகம்

## பகிரங்க ஏல விற்பனை

பழுதடைந்த பொருட்கள் 1-11-1977-ந் திகதி அன்று காலை 10 மணிக்கு சுன்னுகம் மத்திய மின்சார நிலையத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும். இந்தப் பொருட்களின் அட்டவணையை மின்சார நிலையப் பொறியியலாளரின் அனுமதியுடன் ஏல விற்பனைக்கு முன்னர் ஏதாவது வேலைநாளில், கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம்.

சித்திகரமாக, விலைகோரியவர் ஏல விற்பனைக்குப் பின்னர் முழுத்தொகையையும் செலுத்திப் பொருட்களை உடனடியாக எடுத்துச்செல்ல வேண்டும்.

ப. சபாரத்தினம்
மின்சார நிலையப் பொறியியலாளர்,
சுன்னுகம்.
7411

## பதவி வெற்றிடம்

அளவெட்டி மல்லாகம் ப நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணப்படும் வெற்றிடங்கள் உள்ளன யாழ். மாவட்டத்தில் குறைந்தது இரு வருடங்கள் தொடர்ந்து வசித்துள்ளோர் விண்ணப்பிக்கலாம். சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. நிரந்தர கணக்காளர் தரம் III.
2. நிரந்தர கணக்கு லிகிதர் தரம் II.

மேற்படி பதவிக்கான சகல விண்ணப்பங்களும் சங்கத்திலிருந்து -/50 சதம் செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் 31-10-77 திங்கட்கிழமை பகல் 12-00 மணிக்கு முன்னதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். மேலதிக விபரங்களைச் சங்கக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்
7412

## கேள்விப் பத்திரம்

ஊர்காவற்றுறைப் ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை

மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான இஸ்குரு 5 தொன் லொறிக்குப் பொடி அடிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் 25-10-77க்கு முன் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வேண்டுவோர் மேல் காணும் முகவரியில் ரூ 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்பெற்ற கேள்விப்பத்திரகாரர் குறித்த தவணையில் வேலையை முடித்துக் கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

பொது முகாமையாளர்
ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்
12-10-77. 7388

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

# கைதடியில் சைவ விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி இலங்கைச் சைவ அநாதை இல்லத்தில்இம்மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை சைவக்குருத்திளிகள் இல்ல அங்குரார்ப்பணவிழா, நவராத்திரி விழா, சைவ நூலகத் திறப்புவிழா, சைவசமயப்பிரவேசவிழா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் சைவக்குருக்கள் சிதம்பரநாததேசிகர் தலைமையில் சமய தீட்சை வைபவம் முதலில் இடம்பெறும். அடுத்து சாவகச்சேரி திவ்விய ஜீவன சங்கத்தினர் தலைமையில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறும். இதனைத் தொடர்ந்து பிரதமவிருந்தினர் சிவதர்ம வள்ளல் க. கனகராசா சைவ நூலகத்தைத் திறந்துவைப்பார். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெறும். சைவப் புலவர் க. சி. குலரத்தினம் 'நவராத்திரி' பற்றியும் திரு. தி. ஜெயராஜன் 'விஜயதசமி' பற்றியும் உரையாற்றுவர்.

இறுதி நிகழ்ச்சியாக இறைபணிக்குத் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கும் சகோதரிகளுக்கான சைவக் குருத்திளிகள் இல்ல அங்குரார்ப்பணம் நடைபெறும். அமைப்பாளரும் இல்லப் பொறுப்பாளருமான திரு. ஆ. கந்தையா அறிமுக உரை நிகழ்த்துவார்.

இவ்விழாக்கள் இல்லத் தலைவர் திரு க. ஞானச்சந்திரன் தலைமையில் நிகழும். (அ)

# பாலர் பாடசாலை ஆசிரியர் அமைச்சரைச் சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசாங்கம், பாடசாலைகளில் மாணவர்களை வகுப்பில் சேர்த்துக்கொள்ளும் வயதெல்லை ஐந்தாக குறைக்கப்பட்டதையடுத்து வடபகுதியில் வேலைவாய்ப்பை இழந்துள்ள பாலர் பாடசாலை ஆசிரியைகள், ''வடஇலங்கைப் பாலர் பாடசாலை ஆசிரியைகள் சங்கம்'' என்று சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இது தொடர்பான கூட்டம் செல்வி இராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கல்வியமைச்சா திரு. நிஸங்கா விஜயரெத்தினவைச் சந்தித்து தமது குறைபாடுகளை எடுத்துக்கூறுவதெனவும், பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு பயிற்சி வகுப்புக்களை நடாத்தவும், எஸ். எஸ். சி. வகுப்பு சித்தி பெறுதவர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மீண்டும் வகுப்புகள் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (கை-உ)

# அகதிகள் இருப்பதால் பாடசாலை மூடப்பட்டது

வவனியா, சனி

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் அகதிகள் தொடர்ந்தும் தங்கியிருப்பதால் பாடசாலை இப்போது மூடப்பட்டுள்ளது.

அகதிகள் வெளியேறிய பின்னர் இம் மாதம் 17ம் திகதி பாடசாலை மீண்டும் திறகப்படுமென மேற்படிவித்தியாலய அதிபர் திரு. பொ. கனகரத்தினம் கூறினுர்.

அகதிகள் அனைவரும் திங்கட்கிழமைக்குள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவர் என அரசாங்க அதிபர் தம்மிடம்உறுதி அளித்துள்ளார் என்றும் அதிபர் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் இதுவரை பாடசாலை வளவிலுள்ள மரங்களின்கீழ் வகுப்புகள் நடத்தப்பட்டு வந்ததாகவும் இங்கு மழைதொடர்ந்து பெய்வதால் வகுப்புக்களை நடத்தமுடியாமலிருப்பதாகவும் அதிபர் கூறினுர். [இ]

## ஆயருக்கு அபிஷேகம்

அரியாலை, வெள்ளி

கொழும்பு அத்தியட்சாதினத்தின் புதிய ஆயராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அதிவணக்கத்துக்குரிய பீதாசுவீதின் பெர்ணுண்டோ ஆண்டகை நவம்பர் மாதம் 30ந் திகதி கொழும்பு வாழும் மீட்பர்கதீட்ரல் தேவாலயத்தில் நடைபெறும் விசேஷஆராதனை ஆயராக அபிஷேகம் செய்யப்படவிருக்கிருர்.

---

**The Fine Arts Society, Jaffna**
**நுண்கலை மன்றம், யாழ்ப்பாணம்**

செல்வி மாலினி ஸ்ரீநிவாசன்
அவர்களால்
வீணை, வாய்ப்பாட்டு வகுப்புகள்
ஆரம்பம்
21-10-77 வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணி
411, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7425) W. S. செந்தில்நாதன் செயலாளர்

---

யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

**கழிவு சீனி—ஏல விற்பனை**

மேற்படி சங்கத்தில் சேர்ந்துள்ள கழிவு சீனி கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது.
முடிவு திகதி:- 19-10-1977.
மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1977 ஒக்டோபர் 14. 7413

# வானம் பார்த்த பூமி!

காவலூர் எஸ். ஜெகநாதன்

அலுமாரிக்குள் கவனமாக மடித்துவைக்கப்பட்டிருந்த பட்டுச்சேலையை வெளியே எடுத்தாள் சுகந்தி. சேலை மடிப்பினுள் இருந்த காய்ந்து சருகாகிவிட்ட மலர் மாலையை ஆவலுடன் வாரி எடுத்தாள். கண்ணீர்துளிர்த்த கண்களில் ஒற்றிக்கொண்டவள் ஆசையோடு வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தக் காய்ந்துவிட்ட மலர்களுக்கு அவளது நெஞ்சைத் தொட்டசைக்கும் சக்தி எப்படி வந்தது. சருகான அந்த மலர்களை கைகளால் வருடினாள். அதில் ஒரு சுகம். அந்த மலர்களைத் தலையில் சூடிவிட்டு கண்ணாடியின் முன்னால்போய் அமர்ந்துகொண்டாள் அதைப் பார்த்து ஆனந்திப்பதில் ஒரு பூரிப்பு. சுந்தரமே முன்னால் நின்று தலையில் சூடுவதுபோல் ஒரு பிரமை. அவனது கைகள் பட்ட அதே மலர்களைத் தானும் தழுவி... 'அத்தான்...' என்றபடி அவன் மார்பில் முகம் பதிப்பதுபோல் ஒரு நினைவு. எல்லாமே கனவு. சுந்தரம் வரமாட்டான். அவன் வருவதற்கு இன்னும் ஆறேழு மாதங்கள் இருக்கின்றன. அவன் மட்டக்களப்புக்குப் பயணம்போகும்போது அவள் தலையில் சூடிவிட்டுச்சென்ற மாலையைத்தான் அலுமாரிக்குள் பாதுகாத்து வைத்து... நாளும்பொழுதும் அவன் நினைவு ஏற்படும்போதெல்லாம் எடுத்து... அணைத்து...

''சுகந்தி...'' என்றபடியே அவளது மாமியார் அறைக்குள் நுழைந்தார் மாமியாரைத் தனியாக எங்குமே சுகந்தி கண்டதில்லை. எங்கும் எப்போதுமே ஒரு புயலுடன் கூடவேதான் நுழைவாள். ''காய்ஞ்சபூவை வைத்து விளையாடிக்கொண்டு... கொஞ்சம் கூட பொறுப்புணர்ச்சியில்லாமல்...'' அவளது வாய் 'பிரேக்' இல்லாதவாகனம்போல் இயங்கிக்கொண்டிருந்தது. மீண்டும் அந்தக் காய்ந்துவிட்ட மாலையைப் பட்டுச்சேலையுள் வைத்து அலுமாரியுள் பூட்டினாள் மனத்திலும் கணவனின் நினைவை அடைத்துப் பூட்டிவிடத்தான் நினைத்தாள். அடக்கிவிடக்கூடிய நினைவா அது. கட்டிலில் வந்து சரிந்தாள்! அந்தக் கட்டிலில்தான் எத்தனை இனிய கனவுகளைச் சுந்தரம் நனவாக்கியிருப்பான். திருமணம் முடிந்து மூன்றே மாதங்கள் தான் ஒன்றாக— இன்பமாக.. அதற்கு மேல் அவன் வேலைசெய்யும் கம்பனியில் லீவு கொடுக்கமாட்டார்களாம். திருமணத்துக்காக மூன்று மாதம் லீவு கொடுத்தால் போதுமாம். கம்பனியின் முதலாளி திருமணமே செய்யாதவன்போலும். நினைக்க நினைக்க ஆத்திரமாக இருந்தது சுகந்திக்கு

அந்த மூன்று மாதங்கள்— மூன்று பிறவிகளே வாழ்ந்துவிட்டதுபோல் இருக்கிறது— இனிக்கிறது. அந்த நாட்களின் ஏதாவது ஒரு நிமிடத் துளிகளின் நினைவில் தன்னைமறந்து மூழ்கிவிடுவாள் சுகந்தி. நெடுநேரமாக பிரமைபிடித்தவள் போல் அமர்ந்திருப்பதைக் கண்டு அவளது கணவனின் தங்கைகள் கேலி செய்வார்கள். சமயத்தில் செந்தில்கூட கேலிசெய்வான். அண்ணனின் மனைவியைச் சீண்டி வேடிக்கை பார்ப்பதில் அவனுக்குக் கொள்ளை ஆசைதான். சுந்தரத்தைப் போலவே அவனும் அழகன்தான். எவ்வளவுதான் கேலிசெய்தாலும் அண்ணன் மீது அவன் கொண்டிருந்த மரியாதை சுகந்தியிடமும் வெளிப்படத்தான் செய்தது. புகுந்த வீட்டில் மாமியார்— மைத்துனிகள்— மைத்துனன் இவர்களுடன் சுகந்தியின் உடல் வாழ்ந்துகொண்டிருக்க அவள் உள்ளம் மட்டும் மட்டக்களப்பில் உள்ள கணவனுடனேயே சென்றுவிட்டது. நாள் முழுவதும் சுந்தரத்தின் நினைவுடனேயே ஏங்கிக் கிடப்பாள். திருமணம் முடிந்து ஒன்றாக வாழ்ந்த அந்த மூன்று மாதங்களின் இனிய காட்சிகள் திரும்பத் திரும்ப அவள் மனக்கண்ணில் ஓடிக்கொண்டிருந்தன.

மட்டக்களப்பிற்குப் போவதற்குத் தயாராகிவிட்டான் சுந்தரம். ''சுகந்தி...'' அவனது அழைப்பில்தான் எத்தனை விதமான உணர்ச்சிகள் கனிவு... குழைவு, சோகம். கண்களிலே நீர்தேக்கி நிமிர்ந்து பார்த்தாள் கூடவே அவன் பின்னால் படலைவரை சென்று வழியனுப்பவேண்டும்; மனம் கேட்கவில்லை. பஸ்ஸில் ஏறும் வரையாவது கூடச் சென்று— அல்லது அந்த பஸ்ஸிலும் ஏறி ரயில்நிலையம் வரை சென்று— பாழும் மனம்தான்கேட்கிறதா என்ன? அவருடன் கூடவே ரயிலிலும் ஏறி அவருடன் சென்றுவிடவேண்டுமென்றல்லவா துடிக்கிறது. ''அத்தான் மட்டக்களப்பிலே வீடொன்று பாருங்க'' தயங்கியபடியே கேட்டாள். ''சுகந்தி நான் உழைக்கிற சம்பளத்திலை அதெல்லாம் கட்டுபடியாகாது. இப்ப தனியாக வீடு எடுக்கிறது சுலபமாக நடக்கிற காரியமில்லை'' என்று விட்டுத் தனது கைகளால் அவள் கன்னத்தில் கோடு கிழிக்க கண்ணீரைத் துடைத்துவிட்டான் சுந்தரம். ஏக்கத்துடன் விடை கொடுத்து விட்டாள் சுகந்தி. அந்தப் பிரிவின் இன்பம் இப்போதல்லவா புரிகின்றது அன்று அவளது கண்ணீரைத் துடைக்க சுந்தரத்தின் கைகள் இருந்தன இன்று? சுந்தரத்தின் கைகள் முன்னூறு மைல்களுக்கு அப்பால் அல்லவா இருக்கின்றன.

மாலை நேரம். மயக்கும் அந்தச் சூழலில் படிந்திருந்தது சுகந்தியும் சுந்தரத்தின் நினைவுடன் கட்டிலில் மயங்கித்தான் கிடந்தாள். அவள் கையில் முதல்நாள் வந்துசேர்ந்த சுந்தரத்தின் கடிதம் இருந்தது. அதை அவள் இருபது தடவைகளுக்கு மேல் படித்துவிட்டாள். அப்போதும் அது ரசனையுள்ள கவிதையாகத்தான் இருந்தது. கடிதத்தின் ஒவ்வொரு வரிகளையும் மீண்டும் மீண்டும் முணுமுணுத்தாள். பாடமாக்குகின்றாளோ என்னவோ?'' உன்னைப் பிரிந்திருந்த இந்த இரண்டு மாதமும் எவ்வளவு துயரத்துடன் கழிந்துவிட்டது. சகு...இன்னும் மூன்று மாதத்தின் பின் கம்பனியில் லீவு கிடைக்கும்.'' வாசித்தபோது அவள் மனதில் துன்ப முள்ளின் நெருடல் வருத்தியது. மூன்று மாதமாம். அதுவரைக்கும் அவரைக் காணாமல் என் உயிர் நிலைத்திருக்கும் என்பதில்தான் அவருக்கு எவ்வளவு நம்பிக்கை எத்தனை இரும்பு மனம். அத்தான், அத்தான் உங்களைப் பிரிந்து இருந்த இந்த இரண்டு மாதங்களும் நரகத்தில் வாழ்ந்த இரண்டு யுகங்கள். இன்னும் மூன்று மாதங்கள் இந்த வேதனையிலா? என்னால் முடியுமா? தலையணைக்கடியில் வைத்திருந்த கணவனின் போட்டோவை எடுத்தாள். அது அவளைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது.

மாமியார் சாப்பிடுவதற்கு அழைத்தபோதும் வயிற்றில் கோளாறு என்று பொய் சொல்லிவிட்டு படுத்திருந்தாள். வயிற்றிலல்ல மனதில்தான் கோளாறு என்பதை யார் அறியவார்? படத்தையே பார்த்து...ஏக்கமும் பெருமூச்சுமாக இருந்தவள் கண்மூடி உறங்கிவிட்டாள் அல்ல கனவினில் மூழ்கிவிட்டாள். எத்தனை மணிநேரம் அப்படித் தூங்கிக் கிடந்திருப்பாளோ தெரியவில்லை. கனவினில் சுந்தரம் கன்னத்தைக் கடித்ததால் திடுக்கிட்டு விழித்தாள். எரிந்துகொண்டிருந்த அவள் உடலில் எண்ணெய் வார்ப்பது போல் கனவின் நினைவுகள் வருத்தின. வீட்டுக்கு வெளியே சூழ்ந்திருந்த நிலா வெளிச்சம் அவள் உடலை உள்ளாக புரியாத உணர்வுகளைத் தூண்டின. கணவன் இப்போது அருகில் இருந்தால்...நினைத்துப் பார்த்தாள். நினைவு இனித்தது. அதுவே நனவானால்? எழுந்து முற்றத்துக்கு வந்தாள். மனதில் எழும் அந்த உக்கிரமான உணர்வுகளைப் போக்கிவிடவேண்டும் என்ற விருப்பு. வானில் தோன்றும் பாதிநிலாவின் மீதியைப் பார்த்து அது முழுமையாகும் வரை காத்து நிற்கவேண்டும். அதற்கு இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றன. முற்றத்தில் இறங்கினாள். முற்றத்தில் செந்தில் தனிமையில் சுகம் கண்டுகொண்டு நிற்பான் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவனுக்கு ஒரு காதலி இருக்கலாம். அவளது பிரிவுத் துயர் தாளாமல் நினைவுக் கடல் மூழ்க அவன் நிலா வெளிக்கு வந்திருக்கலாம். அந்த வேளையில் அந்த நிலையில் சுகந்தி அவனைத் தனிமையில் சந்திக்க நேரிட்டது. அவள் எதிர்பார்க்காத ஒன்று. ஆண்மை பொலிந்திருக்கும் அவன் உடலை நிமிர்ந்து பார்த்தாள். அவனது கண்களை எதிர்கொண்டாள். அந்தப் பார்வை-வெறிப் பார்வை வெளிப்படுத்திய உணர்ச்சி...திரும்பி வீட்டுக்குள் ஓடிவந்தாள். 'அத்தான் உங்கள் கருணையான பார்வையைத்தவிர வேறு எதையும் என் கண்கள் பார்க்கக் கூடாது. எந்தச் சலனமும் என் மனதிலே தோன்றுது.' என்று அவள் மனம் ஓலமிட்டுக்கொண்டிருந்தது. உள் வீட்டுக்குள் ஓடிவந்தாள். அலுமாரிக்குள் இருந்த கசங்கிய மலர்களை எடுத்தாள். நெஞ்சோடு அணைத்தபடியே கட்டிலில் விழுந்தாள். அவள் உடல் துவண்டது; மனம் துவண்டது; பயணம் போகும் போது சுந்தரம் சூடிவிட்டுச்சென்ற மலர்கள் துவண்டன

காலையில் எழுந்தாள். கிணற்றடிக்குச் சென்றபோது அங்கே வழக்கம் போல செந்தில் நின்றான். எப்போதும் போலவே அவனது இதழ்களில் குறுநகை மிதந்தது. அந்தச் சிரிப்பில் உள்ளர்த்தம் தொனிப்பதுபோலவும் கேலியான கிண்டல் இருப்பதுபோலவும் தோன்றியது சுகந்திக்கு. இவ்வளவு நாளும் அவன் சிரிக்கும்போதுதோன்றாத நினைவு... குழப்பமான கற்பனைகள் இப்போது மட்டும் ஏன் தோன்றுகிறது. இது அவளுக்கே புரியவில்லை. கிணற்றடியில் இருந்து வந்ததும் வராததுமாக சுந்தரத்துக்குக் கடிதம் எழுதத் தொடங்கிவிட்டாள். 'அத்தான் உடனே வந்து என்னைக் கூட்டிச் செல்லுங்கள், எவ்வளவு செலவானாலும்— சிரமமானாலும் பரவாயில்லை, வீடொன்று எடுத்து, வந்து என்னைக் கூட்டிச் செல்லுங்கள். வரத்தான் வசதியில்லையென்றால் ஒரு தந்தி அனுப்பிவிட்டு ரயில் நிலையத்தில் வந்து நின்றாலும் நான் வந்து சேர்ந்துவிடுவேன். ஏன்? எதற்கு? என்றெல்லாம் கேள்வி கேட்பீர்களேயானால் எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே விடை வானம் பார்த்த பூமியாக நான் இருக்க விரும்பவில்லை என்பதுதான்'

—கடிதத்தை அனுப்பிவிட்ட பின்தான் அவளுக்கு நல்ல காற்றினைச் சுவாசித்தது போல இருந்தது. அவள் வாழ்வில் நிம்மதி கலந்தது.

(யாவும் கற்பனை)






# பண்ணும் பரதமும் கண்ணெனப்போற்றுவோம்

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

நவராத்திரி நினைவு. துள்ளிக் குதிக்கிறார்கள் குழந்தைகள். வீரத்தை, செல்வத்தை, கல்வியை விலைமதிக்கொணாப் பொக்கிஷங்கள் என, வேண்டி நிற்கிறார்கள் பக்தர்கள். நாதமெழுப்பும் இசைக்கருவிகளை, கலாதேவியின் காலடியில் இட்டு, கலையார்வம் செழித்திட அருள் வேண்டி இறைஞ்சுகிறார்கள் கலைஞர்கள். 'சகலகலாவல்லியே!' என்ற அன்பு ஓசம் எங்கும் ஒலிக்கிறது. அருந்தமிழ், கலைத்தமிழ், தண்டமிழ், பசுந்தமிழ், தெள்ளுதமிழ், முத்தமிழ் என்றெல்லாம் வாழ்த்துவதில் இன்புறும் கலைமகள் 'பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான் எண்ணும் பொழுதெளிதெய்த நல்காய்!' என வேண்டுகிறார். ஆம் ''பண்ணும் பரதமும் தெய்வீகக் கலைகள். பண்டுதொட்டுப் போற்றப்பட்ட கலைகள்; வாழ்வு வளம்பெற இவை தரும் பயன்கள் அளப்பில.

'இசை எம்மை எல்லையற்ற பரிபூரண பரம்பொருளின் விளிம்பிடை அழைத்துச் சென்று அதனை ஒரு, சில விநாடிகள் கண்ணுற்றுக் களிக்கச் செய்கிறது' என்றார் ஓர் ஆங்கிலக் கவிஞர். கடவுள் மனிதனுக்கு அளித்துள்ள பெரும் கொடைகளுள் கானம் தனிச்சிறப்புடையது. எனவேதான், பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என வேண்டினார் அன்பர் ஒருவர். இசைக்கலையின் தனிச்சுவை ஒருவனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது; அன்பும் அடக்கமும் பக்தியும் அவனிடம் பளிச்சிடுகிறது; இதயசுத்தி தானாகவே வளர்கிறது. இதனால் நல்லுணர்ச்சிகள் தோன்றி, நற்செய்கைகளாய் பரிணமிக்கின்றன, பண்பான வாழ்வுக்கு பண் பயன்படுகிறது. எனவேதான் சைவ உலக பண்ணுக்கு இசைக்கு-பஜனைக்கு ஆலயங்களில் முக்கியத்துவம் கொடுத்தது. ஓதுவார் மூர்த்திகளை அன்று முதல் ஆதரித்தது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நம் மக்கள் கூடிய அக்கறை காட்டாத இத்துறை இன்று ஈழத்தமிழ் மக்கள் பெருமைப்படும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது, இசைவல்லுநர்களின் ஈடுபாட்டினையும் அரியநற் தொண்டினையும் பாராட்டாமல் இருக்கமுடியாது, இசை விழாக்கள் நடாத்துவதில் சற்று தேக்கநிலை இருப்பதைக் காணமுடிகிறது, இரசிகப் பெருமக்கள் உந்துசக்தியாய் மிளிர்ந்தால் இக்குறை துடைக்கப்படலாம், நிம்மதி உலகை, திருப்தி உலகை எம்முன்னெம்மேலும் சிருஷ்டிக்க இசைத்தமிழ் வளர்ப்போம் பண்ணுடன் பாடலை நற்பணியெனக் கொள்வோம்,

'பரதம்' என்றதும் அது பரதநாட்டியத்தை மட்டும் குறிப்பதாக சிலர் கருதுகின்றனர். நாடகமும் இதன் வசப்பட்டதே. நாடகம் தனினத்துக்குரியவிடயமாக அன்று கருதப்படவில்லை, எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட திருச்செந்தூர்ப் புராணத்தில் சுகப்பிரமரிஷி பூசைசெய்த அத்தியாயத்தில் முருகப்பெருமான் நாடக சுருதிக்கமைய நடித்தார் என அறிகின்றோம். சூரியகுல சித்திர சேனன் திருப்பரங்குன்றத்தில் தவமிருந்து, அவர்முன் தோன்றிய முருகவேளிடம் மதுரையில் சிவன் புரிந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் நாடகசுருதி நூல்பிரகாரம் நடிக்கும்படி வேண்டுவதை சுட்டிநிற்கிறது பின் வரும் பாடல்;

''கூடலி னினிதா யுள்ள
கோலமோ ரறுபா னன்கா
யாடின நடனம் யாவு
மளியனே னினிது காண
நாடகச் சுருதியாக
நடித்திடாக் காட்டல்
வேண்டி
தேடின னென்று கூறித்
திருவுளம் சிறப்ப நோக்கி''

உற்சவகாலங்களில் — அதுவும் முதல் முதல் இடம் பெறும் கொடியேற்றுவைபவங்களில் - பழம் பெரும் தலங்களில் சிவாச்சாரியர்கள் நாடகம் உட்பட பல கலையும் செழித்திட தேவகணங்களை வேண்டுவதை நாம் பார்க்கிறோம். அலங்கார சூர்ணிகையின்போது ''காவிய, நாடக, புராண, இதிகாச அபிலேஜக நிஷ்டிக'', என்ற அடி உச்சரிக்கப்படுகிறது. அஸ்திரதேவர் பிரார்த்தனையின் போது பல வாழ்த்துக்களுடன் இதிகாச, ஆகம, புராண, காவிய, நாடக, அலங்கார,

(7ம் பக்கம் பார்க்க)

## கலாயோகியின் வாழ்க்கையும்பணிகளும் -6

# இந்தியவிடுதலை இயக்கமும் சுதேசியமும்

ச. அம்பிகைபாகன்

கலாயோகி அவர்கள் இலங்கையிலிருந்த காலத்தில் இந்தியாவில் பெருங்கொந்தளிப்பேற்பட்டது. இதற்குக் காரணம் 1906-ம் ஆண்டில் ஏற்பட்ட வங்காளப் பிரிவினையாகும். இதனால் வங்காளத்தில் குண்டு வீச்சுகளும் அரசியல் கொலைகளும் பெருமளவில் நடைபெற்றன. இக்கொந்தளிப்பை அடக்குவதற்கு ஆங்கில அரசாங்கம் பல தலைவர்களை விசாரணையின்றி நாடு கடத்தியது. மறியலில் போட்டது. இக்காலத்தில்தான் சுதேசியியக்கமும் தீவிரமாகச் செயல் முறையில் வந்தது.

பெரும்பாலான இந்தியர்கள் சுதந்திரமென்றால் இந்தியாவின் ஆட்சி ஆங்கிலேயர் கையிலிருந்து இந்தியர் கைக்கு மாறுவதேயெனக் கருதினர். சுதேசியென்றால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யும் பொருள்களுக்குப் பதிலாக இந்தியாவில் உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களை உபயோகித்தலேயெனக் கருதினர். ஆனால் கலாயோகி இவற்றுக்கு மேலான சிறந்த இலட்சியங்களை எடுத்துக்காட்டினார். இக்காலத்தில் (1906-1909) அவர்கள் எழுதிய கட்டுரைகள் 'கலையும் சுதேசியமும்' "தேசிய இலட்சியங்கள் பற்றிய கட்டுரைகள்" என்னும் நூல்களாக வெளிவந்து, இந்திய மக்களிடையில் பெரும் விழிப்பை ஏற்படுத்தின. தென்னாபிரிக்காவிலிருந்த காந்தியடிகள் இவ்விரு நூல்களையும் படிக்கும்படி தமது தொண்டர்களைத் தூண்டினார். இவ்விரு நூல்களே கலாயோகி அவர்களுக்கு இந்தியத் தலைவர்கள் மத்தியில் சிறந்த இடத்தைத் தேடித்தந்தன.

கலாயோகி அவர்கள் இந்திய விடுதலை, சுதேசி என்பவை பற்றி கூறியவற்றின் சாரத்தை இங்கு தருகின்றேன்.

இந்திய மக்கள் சுயநலத்துக்கல்லாமல் உலக சேமத்துக் குழைக்கும் நோக்கத்துடனேயே சுதந்திரப் போராட்டத்தில் இறங்கவேண்டும். இந்திய சுதந்திரப்போராட்டம் உலகில் ஏகாதிபத்தியத்துக்கும் தேசியத்துக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தின் ஓர் அம்சமாகும். ஏகாதிபத்தியம் பல தேசங்களைத் தன் கீழ் அடக்கும் தன்மையது. ஏகாதிபத்தியத்துக்குள் அடங்கியிருக்கும் நாடுகள் பல துறைகளிலும் நசுக்கப்படுகின்றன. எங்கள் தேசியத்துக்கும் சர்வதேச ஒற்றுமைக்கும் ஒரு முரண்பாடுமில்லை.

இந்தியா பல துறைகளிலும் உலகுக்கு வழிகாட்டவேண்டியிருக்கிறது. அரசாங்கத்தால் நிறுவப்படும் பெரும் பெரும் தொழிற்சாலைகளிலும் பார்க்க சோஷலிச முறையில் தாபிக்கப்படும் சிறு தொழிற்சாலைகள் மூலம் பொருள் உற்பத்தியைச் சிறந்த முறையில் செய்யலாமென்பதை நாம் செய்து காட்டவேண்டும். ஆகாயத்தைப் புகையினாலும் ஆறுகளை கழிவு பொருள்களாலும் அசுத்தப்படுத்தாமல் அழகிய சிறு சிறு நகரங்களைத் தாபிக்கலாமென்பதையும் அவற்றிலிருந்து அழகுள்ள பொருள்களை உற்பத்தி செய்யலாமென்பதையும் உலகுக்குக் காட்டவேண்டும்.

இன்னும் தற்கால ஆராய்ச்சிகளைக் கொண்டு விஞ்ஞானத்துக்கும் சமயத்துக்குமிடையில் ஒரு உறவை ஏற்படுத்தவேண்டும். விஞ்ஞானத்துக்கும் சமயத்துக்கும் ஒரு முரண்பாடில்லையென்பதை விளக்க வேண்டும். சமயங்களுக்கிடையில் சமரசம் ஏற்பட்டால் மாத்திரம் போதாது. சமயங்களெல்லாம் இறைவனை அடைவதற்குப் பல் வேறு வழிகளென்பதை உலகுக்குக் காட்டவேண்டும். மனிதனுடைய சமூக நிலைக்கும் பல வேறு இயல்புகளுக்கேற்பச் சமயங்கள் தோன்றியவை என்பதை நிலைநாட்டவேண்டும்.

இந்தியா ஒரு தேசமல்லவென்று சிலர் கூறுகின்றனர். பூமிசாத்திர அடிப்படையிலும் கலாச்சார அடிப்படையிலும் இந்தியா ஒரு தேசமென்பதை பாரபட்சமின்றி நோக்குவோர் அறிந்துகொள்வர். தெற்கேயுள்ள இராமேஸ்வரமும் வடக்கேயுள்ள காசியும் இந்துக்களை ஒன்றாக இணைக்கின்றன. இந்துக்கள் எங்கிருந்தாலும் ஸ்நானம் செய்யும் போது இந்தியாவின் பல பாகங்களிலுள்ள கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி முதலிய ஏழு புண்ணிய தீர்த்தங்களையும் நினைவு கூருகின்றார்கள். பிதிர்களுக்கு நீர்க்கடன் செய்யும் போது, மேற்கூறப்பட்ட ஏழு நதிகளின் நீரும் வந்து தாமிறைக்கும் நீரோடு கலக்கும்படி பிரார்த்திக்கின்றார்கள்.

இப்பொழுது பங்கிம் சந்திர சட்டர்ஜியின் வந்தேமாதரம் என்னும் கீதம் இந்திய மக்கள் அனைவரையும் இணைக்கும் தாரகமந்திரமாக விளங்குகிறது. இது பிரான்ஸ் தேசத்துப் புரட்சிக்காலத்தில் பாடப்பெற்ற 'மாசேல்ஸ்' என்னும் கீதம் போல் சக்திவாய்ந்தது.

இந்திய தேசிய இயக்கம் துவேஷம் தன்னலம் போன்ற உணர்ச்சிகளின் வசப்பட்டியங்கக்கூடாது. நேசத்தின் அடிப்படையில் இயங்கவேண்டும். முதலாவது இந்தியா மீது நேசம், இரண்டாவது இங்கிலாந்து மீது நேசம், மூன்றாவது உலகத்தின் மீது நேசம். நாம் சேவை செய்ய விரும்பியே சுதந்திரத்தை நாடுகிறோம். இதனாலேயே நாங்கள் ஆங்கிலேயருக்குக் கூறுகிறோம் நீங்கள் இசைந்தால் உங்களுடைய ஒத்துழைப்போடு சுதந்திரத்தைப் பெறுவோம். அப்படியில்லாவிட்டால் உங்களை எதிர்த்துப் போராடிச் சுதந்திரத்தைப் பெறுவோம்.

### சுதேசி

இந்தியத் தொழில்களை ஆங்கிலேயர் நசுக்கியவிதத்தை ரொமேஷ் சந்திர டற் என்னும் அறிஞர், இவர் ஒரு காலத்தில் ஐ. சி. எஸ். உத்தியோகத்திலிருந்தவர், பின்வருமாறு கூறுகிறார்! 'இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் ஐரோப்பாவில் இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு இந்தியப் பொருள்கள் மீது கடும் வரிகளைப் போட்டனர். பிரிட்டிஷ் பொருள்கள் இந்தியாவில் இறக்குமதி செய்வதற்கு வசதி செய்யும்பொருட்டு பிரிட்டிஷ் பொருள்கள் மீது மிகவும் குறைவான வரிகளைப் போட்டனர். 1816-17 ஆண்டில் இந்தியா தனது உபயோகத்துக்கு வேண்டிய துணிகளை உற்பத்திசெய்ததோடு 1,645,348 பவுண் பெறுமதியான துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. 30 வருஷங்களுக்குள் இந்தியாவின் ஏற்றுமதி துண்டாக மறைந்து விட்டது. இதற்கு மேலாக இந்தியா 40 லட்சம் பவுண் பெறுமதியானபருத்தித் துணிகளை இறக்குமதிசெய்தது.

இதனால் ஏற்பட்ட விளைவை ஓர் ஆசிரியர் பின் வருமாறு கூறுகிறார். "'இந்தியாவிலுள்ள நெசவாளர் சமீப காலம் வரைக்கும்செழிப்பாகவாழ்ந்து வந்தனர். ஆனால் மான்செஸ்டரிலிருந்து இயந்திரங்களினால் செய்யப்பட்ட பருத்தித் துணிகள் இறக்குமதி செய்யப்பட்டதும் பல கைத்தறி நெசவாளர் தங்கள் வேலையை இழந்தனர். இதனால் தரித்திரத்தினால்பீடிக்கப்பட்டவரிற் சிலர் இறந்துபட்டனர். சிலர் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினர்''

இந்நிலையைச் சமாளிப்பதற்கு இந்தியர் பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் மான்செஸ்டர், லங்காசையர் போன்றவிடங்களில் தாபிக்கப்பட்டவை போன்ற நெசவாலைகளைத் தாபித்து வருகின்றனர். இப்பெரும் நெசவாலைகள் மூலம் கைத்தறிகளில் நெசவு செய்யப்பட்ட அழகிய துணிகளைப் போல் தயாரிக்க முடியாது. நெசவாலைகளில் வேலை செய்யும் நெசவாளி இயந்திரத்துக்கு அடிமையாகி, தனது கைத்திறனைக் காட்ட முடியாதவனாகிறான். மேலும் நெசவாலைகளில் வேலை செய்வோருக்கு நகரங்களில் போதிய வீட்டு வசதி கிடையாது. இதனால் அவர்கள் சேரிகளில் வசிக்க நேரிடுகிறது. அவர்கள் குடிப்பழக்கம் போன்ற தீய பழக்கங்களுக்கு இரையாகிறார்கள். ஆகவே சுதேசி இயக்கத்தில் ஈடுபடுவோர் நெசவாலைகளைத் தாபிப்பதை நிறுத்திவிட்டு, கைத்தறி நெசவில் ஈடுபடுவோருக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்; இதுவே

(5-ம் பக்கம் பார்க்க)



## செய்து பாருங்கள் ....

### 'மாங்காய்ச்சட்னி'

தேவையானவை - மாங்காய் 2, ப. மிளகாய் 3, சர்க்கரை 3 மேசைக்கரண்டி, உப்பு அளவுக்கு.

முறை: மாங்காய் தோல் சீவி உப்பு போட்டு, பச்சைமிளகாயும் சேர்ந்து சிறிதளவு தண்ணீர் ஊற்றி வேகவைக்கவும். பிறகு நன்றாகக் கடைந்து சர்க்கரைபோட்டு உபயோகிக்கவும்.

### 'மாங்காய் ஊறுகாய்'

தேவையானவை: மாங்காய் 2, கடுகு 50 (கிராம்) மிளகாய்த்தூள் 50 கிராம், பெருங்காயம் 1 துண்டு (நெரித்தது), உப்பு தேவையான அளவு.

முறை: மாங்காயை நன்றாகக் கழுவி துடைக்கவும். உலர்ந்தவுடன் துண்டங்களாக்கவும், நல்லெண்ணையைப் பொடியாக்கிய தூள்களுடன் சேர்க்கவும். வெட்டிய மாங்காய்த் துண்டங்களை அதனுடன் கொட்டிக் கிளறவும் உப்பு சேர்த்து, மாங்காய்த் துண்டுகள் முழுகும் அளவு எண்ணெய் சேர்த்து வெயிலில் வைத்து எடுக்கவும். ஊறியபின் ஊறுகாய் தயார்.

### 'மாம்பழ ஜாம்'

தேவையானவை: மாம்பழம் சர்க்கரை, சிட்ரிக் ஆசிட்'

முறை — காய்வட்டான மாம்பழங்கள் சிறந்தவை. சிறு துண்டுகளாக வெட்டி சிறிது நீரில் கொதிக்கவைக்கவும். எடுத்து வடிகட்டவும்— தோல், கொட்டை நீக்க, பழச்சாறு எத்தனை கப்போ அதே அளவு சர்க்கரையைச் சேர்க்கவும். அடுப்பில் வைத்துக் கிளறவும். 1/4 கரண்டி சிட்ரிக் அமிலம் சேர்க்கவும்— கட்டிப் பருவம் வந்தவுடன் இறக்கி ஆறவைக்கவும். வாசனைக்கு ஏலக்காய் அல்லது கிராம்பு பொடிசெய்து சேர்க்கலாம்.

### 'மாம்பழ ஐஸ்கிறீம்'

தேவையானவை — மாம்பழம் 1, பால் 1 போத்தல், சர்க்கரை 3/4 ரு; முந்திரிப்பருப்பு (பொடிசெய்தது) ஒரு தேக்கரண்டி, பாலாடை 1/4 கப், எசன்ஸ் 1 கரண்டி.

முறை: பாலை நன்றாகக் கொதிக்கவிட்டு சிறிது நேரம் அடுப்பில் வைத்துக் கிளறவும் சர்க்கரையைச் சேர்க்கவும். மாம்பழத்தைப் பிழிந்து சாற்றைக் கட்டியாக எடுத்துக்கொள்ளவும். இறக்கிய பாலில் மாம்பழச்சாறு பாலாடை இரண்டையும் சேர்த்து நன்றாக முட்டை அடிக்கும் கருவியால் அடிக்கவும். எசன்ஸ் விடவும். பொடிசெய்த முந்திரிப்பைத் தூவவும். 2 ஸ்ரேயில் ஊற்றிக் குளிரவைக்கவும்.

-செல்வி ரஞ்சி யோகுவா,
நவஜீவனம், பரந்தன்.

## அவசியமான சில வீட்டுக் குறிப்புகள்

துணிகளில் இரும்புக் கறைகள் இருந்தால், கறைகளின் மேல் எலுமிச்சம்பழச்சாற்றையும உப்பையும்கலந்து தேயுங்கள். பின் சிறிது நேரம் ஊறவைத்து அலசுங்கள். கறைபோய்விடும்.

0

கீரை, உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் ஆகியன நன்றாகவேகவேண்டுமென்றால், முதலில் தண்ணீரைக் கொதிக்கவைக்க வேண்டும். பின்பு இவைகளைப் போட்டால் நன்றாக வேகும். இதனால் உயிர்ச்சத்துக்களும் கெடாமலிருக்கும்.

0

தலைவலி, ஜலதோஷம், மலச்சிக்கல், இருந்தால் இரவில் சூடான வெந்நீரில் எலுமிச்சம்பழச் சாற்றைக் கலந்து பருகவும். ஆனால் உப்போ, சர்க்கரையோ கலக்கக் கூடாது.

0

அடிக்கடி பேதி மருந்துகளைச் சாப்பிடக்கூடாது. இவற்றால் குடல் பலமிழந்து போகிறது, பல நோய்களும் வருகின்றன.

0

கத்தியோ, கத்தரிக்கோலோ துருப்பிடித்தால் உருளைக்கிழங்கை நறுக்கி துருப்பிடித்த பகுதியைத் தேயுங்கள். துரு அகன்றுவிடும்.

0

இருமல் இருக்கும் போது எலுமிச்சம்பழச் சாற்றுடன் சிறிது கிளிஷரினையும் கலந்து உண்டால் குணமாகும்.

0

குழந்தைகளின் பற்கள் பலம்பெறவேண்டுமானால் பச்சையாக கரட் கிழங்குகளைச் சாப்பிடக் கொடுங்கள்.

0

அகத்திக்கீரையைஉணவில் கலந்துகொள்ளுங்கள். அதில் நிறைய இரும்புச்சத்து இருக்கிறது.

0

உடலில் சுண்ணாம்புச் சத்து (கல்சியம்) குறையும்போது கால் விரல் நகங்களில் வெடிப்பு ஏற்படும். உடலில் சொறி, சிரங்கு வரும். எலுமிச்சம்பழம், கீரை வகைகளை உபயோகிக்கலாம்.

0

அடிக்கடி சளி பிடித்தால் பசுவின் பாலில் கொஞ்சம் ஓமத்தைப் போட்டு காய்ச்சிச் சாப்பிடுங்கள் சளி கரைந்து விடும்.

0

வாழைப்பூ சத்து நிறைந்த ஓர் உணவாகும். இதனை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. ஆனால் இதனுடன் எண்ணெயைச் சேர்க்கக் கூடாது. வாழைப்பூ சாப்பிடுவதால் இரத்த விருத்தி ஏற்படும்.

0

கிழங்குகளில் பலவகையுண்டு, இவற்றில் உடலுக்கு நலம்தரும் கிழங்கு சேனைக் கிழங்காகும். இது குடலில் தங்கியிருக்கும் அழுக்குகளை வெளியேற்றுகிறது. மலச்சிக்கலைப் போக்குகிறது.

0

வாழைக்காயை அடிக்கடி சாப்பிடக்கூடாது. இது உடப்பில் வாயுக் கோளாறுகளைஏற்படுத்துகிறது. வேண்டுமானால் பிஞ்சு வாழைக்காயைச் சாப்பிடலாம்.

0

குடலில் புண்ணுள்ளவர்களும், வயிற்றில் வலியுள்ளவர்களும் தக்காளிபழம் சாப்பிடக் கூடாது. வயிற்றில் நோய் இல்லாதவர்கள் தக்காளிப்பழங்களை நிறையச் சாப்பிடலாம்.

0

துணியில் இரத்தக் கறைபட்டால் உடனே தண்ணீரில் அலசினால் போதும். நாட்பட்ட கறையானால் சிலமணி நேரம் தண்ணீரில் ஊற விடவேண்டும், வெந்நீரில் கசக்குவதில் பிரயோசனமில்லை.

தொகுப்பு:
திருமதி பிலோமினா
மகேஸ்வரன்,

## வானொலி நாடகம் எழுதுவது எப்படி-8

# இவளும் ஒரு — பெண்!

(குறி இசை)
(பின்னணியில் ரேடியோ பாடிக்கொண்டிருக்கிறது)

யோகம்: அத்தான், அம்மா வந்திருக்கிறு.

ராஜா: மெத்த நல்லது.

யோகம்: கேக்கவேண்டியது களை அம்மாவிடமே கேளுங்கோ. பிறகு என்னேடை சண்டை பிடிக்கவேண்டாம்.

ராஜா: ஓ... அதைச் சொல்லுறியா? நான் எவ்வளவு கேட்கிறது. அப்பிடித்தான் கேட்டாலும் கிடைக்கப் போகுதோ...

(ரேடியோ நிறுத்தப்படுகிறது)

யோகம்: அப்ப என்னேடை தான் சண்டை பிடிப்பீங்களாக்கும்.

ராஜா: யோகம், அவையளுக்கு ரோசம், மானம் இருந்தால் எப்பவோ தந்திருப்பினம். இனி வாங்கிற விதத்திலை வாங்க எனக்குத் தெரியும்.

யோகம்: (உரத்து) மெதுவாய்ப் பேசுங்கோ அம்மாவுக்குக் கேட்கப்போகுது.

ராஜா: கேட்டால் எனக்கென்டும் இங்கை பமியல்லை. தெரியுமே.

யோகம்: இப்ப ஏன் என்னிலை பாயுறீங்கள்?

ராஜா: நான் பேசுறது உனக்குப் பாயுறமாதிரி இருக்குதோ. எல்லாம் நான் தந்த இடம். மரியாதையாகச் சொல்லுறன். இண்டைக்கே உன்ரை அம்மாவோடை நீ போகலாம். திரும்பி இங்கை வாறதாக இருந்தால் சொன்னபடி சீதனக்காசோடை வா. இல்லாவிட்டால் அங்கே இரு.

யோகம்: உங்களுக்குக் காசுதான் பெரிசெண்டால் என்னை ஏன் கலியாணம் முடிச்சநீங்கள். காசைக் கலியாணம் கட்டியிருக்கலாமே.

ராஜா: சரிக்குச்சரி வாய் காட்டாதை யோகம், எனக்குக் கோபம்வந்தால் தெரியும் தானே.

“வ்ரணியூரான்”

யோகம்: இப்ப என்ன கோபம் வராமல் சந்தோஷத்திலேயே சண்டைக்கு வாறீங்கள்...

(ஏதாவது விழுத்தி உடைவது போன்ற சத்தம்)

ராஜா: பொத்தடி வாயை. இப்ப நீ பேசப்போறியோ...

யோகம்: என்னுடைய கோவத்திலை அதுகளை ஏன் உடைக்கிறீங்கள். கடவுள் வாயைப் படைச்சது பேசத்தானே. பொத்திவைச்சிருக்கவோ.

ராஜா: இப்ப என்னுடைய கோவத்தை உன்னிலைதான் காட்டப்போறன்.

யோகம்: எங்கை ஏலுமெண்டால் காட்டுங்கோ பாப்பம், ஆகவுந்தான் வெருட்டுறீர்...

மங்களம்: (வந்துகொண்டு) எடியோகம், கொஞ்சம்வாயை மூடிவைச்சுக்கொண்டிரடி.

யோகம்: எல்லாம் உங்களாலைதான் எனக்கிந்த வேதனை. ஆனைதாறன் பூனைதாறன் எண்டு சொல்லி ஏமாத்தி என்னைத்தான் கலங்கவைச்சிருக்கிறியள். (அழுதல்).

ராஜா: யோகம் இந்த மாய்மாலம் எல்லாம் இங்கை வேண்டாம். விளங்கிச்சுதே. சீதனக்காசு கொண்டுவந்தாலொழிய இந்த வீட்டிலை இனி உனக்கு இடமில்லை.

மங்களம்: ஏன் நாங்கள் தாறமெண்டதை இல்லை எண்டனுங்களே! எப்பிடியும் தருவம்தானே.

யோகம்: நீங்கள் தருமட்டும். நான் இங்கை நரக வேதனைப்படுகிறதே. இண்டைக்கு நீங்கள் நீண்டபடியால் அடிவாங்காமல் தப்பினன். இல்லாவிட்டால் இந்தச் சீதனக்காசாலை ஒவ்வொரு நாளும் அடியும் உதையும் தானே எனக்கு, ஏன் இந்தக் கரைச்சல்.

ராஜா: இன்னும் என்னத்துக்கு நிக்கிறுய் யோகம். போகலாம்.

யோகம்: இனி இங்கை நிக்கச் சொன்னாலும் நான் நிக்கப் போறதில்லை. அம்மா வெளிக்கிடுங்கோ...

மங்களம்: எடியோகம் அவசரப்படாதை... எல்லாத்துக்கும் நான் போய் அப்புவை அனுப்புறன்.

யோகம்: அம்மா, இங்கை ஒருதரம் வரத்தேவையில்லை. என்னை உயிரோடை பார்க்க வேணுமெண்டால் என்னை இப்பவே கூட்டிக்கொண்டு போங்கோ, இல்லாவிட்டால் என்னுடைய முடிவு எனக்குத் தெரியும்.

மங்களம்: (மெதுவாக) பிள்ளை அவர் கோபத்திலை பேசிப்போட்டார். கோபம் ஆறச் சரிவரும். நீ இங்கை இரு... நான் போய் அப்பரை அனுப்பிறன்.

யோகம்: முடியாது... இனி இந்த வீட்டிலை ஒரு நிமிஷமும் நான் இருக்கமாட்டன்.

மங்களம்: சரி இதுக்கு மேலை நான் என்னத்தைச் சொல்லுறது. மத்தளம் மாதிரி நான் இரண்டு பக்கமும் அடிபடுறன். இப்ப அங்கை போன உடனே ஏன் கூட்டி வந்தாய் எண்டு கொப்பர் துள்ளப்போருர். சரி வெளிக்கிடு.

யோகம்: நான் போட்டு வாறன்.

ராஜா: அதுதான் எப்பவோ சொல்லிப்போட்டனே. காசில்லாமல் நீ எனக்குத் தேவை இல்லை.

(இசை)

---

## இந்திய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான சுதேசித்தொண்டாகும்.

அனுவசியமான ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்வதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக ஆண்களின் உபயோகத்துக்காக பெருந்தொகையிலிறக்குமதி செய்யப்படும் ஐரோப்பிய உடைவகைகளையும் பெண்களுக்கென இறக்குமதி செய்யப்படும் உயர்ந்த குதிச் சப்பாத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

இந்தியாவில் தற்பொழுது செய்ய முடியாத பொருள்களைச் செய்ய முற்படுவது புத்திசாலித்தனமல்ல. நான் குறிப்பிடுவது விஞ்ஞான ஆராய்ச்சிக்கு வேண்டிய கருவிகள், மணிக்கூடு போன்றவையாகும். தரத்தில் குறைந்தவற்றை செய்வதிலும்பார்க்க அவற்றை இறக்குமதி செய்யலாம்.

மேனாட்டு நாகரீகத்தின் மோகத்தினால் பாரம்பரியமாகச் செய்யப்பட்டுவந்த கலைப் பொருள்களை வாங்குவோர் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதனால் செம்பிலும், வெள்ளியிலும், பொன்னிலும், மரத்திலும், தந்தத்திலும், கல்லிலும் அழகிய கலைப் பொருள்களைச் செய்து வந்த கைவினைஞர்கள் வாடி வதங்கி வருகின்றனர். இந்தக் கைவினைஞர்கள் தான் உண்மையான இந்திய நாகரீகத்தின் சிற்பிகள். இவர்களைக் கவனியாது புது ஆலைகளைத் தாபிப்போர் உண்மையான சுதேசிகளல்லர். இந்தியா வாழவேண்டுமானால் இந்தியக் கலைகள் வளரவேண்டும்.

---

## ஆவியுலகத் தொடர்பு—9

# அவசர காலத்தில் உதவிய ஆவி

**வி. ரவிச்சந்திரன்**

ஒருசமயம் நானும் எனது நண்பரும் பாண்டிச்சேரியில் இருந்து எங்கள் ஊரான விக்கிரவாண்டிக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பி வந்துகொண்டிருந்தோம். அப்போது இரவு பத்துமணி இருக்கும். புதுவையிலிருந்து சிலமைல்கள் தொலைவிலுள்ள ஊசிட்டேரி என்ற பிரமாண்டமான நீர்த்தேக்கத்தைக் கடந்துதான் வரவேண்டும். அப்போது அதன் கரையில் புதிய சாலை போடுவதற்காக பாதை முழுவதும் சல்லிக் கற்களை நிரப்பிவைத்திருந்தனர். நாங்கள் சென்றது கனம் மிகுந்த புல்லட் மோட்டார் சைக்கிள். கற்களின் மீது அதை ஓட்டிச்செல்லவும் முடியவில்லை; தள்ளிச்செல்லவும் முடியவில்லை. வேறு வழியாகச் செல்லலாம் என்ருலோ அனுவசியமாக பல மைல்களை சுற்றிக்கொண்டு செல்லவேண்டும். எங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. திடீரென்று ஆவிகளின் நினைவுவந்தது. அவர்களிடம் உதவி கேட்டால் என்ன என்று சிந்தித்தோம். இந்தச்சமயத்தில் அவர்களால் என்ன உதவி செய்திட இயலும் என்ற அவநம்பிக்கையும் எழுந்தது. எனவே அரைமனதுடனேயே அவர்களிடம் உதவி கோரினோம். அதன்பிறகு நடந்ததை என்னவென்று உரைப்பது. மோட்டார்சைக்கிளின் ஹான்டில் பார் என்னும் கைப்பிடியை மட்டுமே நாங்கள் பிடித்திருந்தோம். திடீரென்று மோட்டார் சைக்கிளின் கனம் குறைந்ததுபோல் ஆகியது. உடனே பின்னல் இருந்து யாரோ தள்ளியது போல நகரவும் ஆரம்பித்தது. முன்பு நாங்கள் தள்ளியபோது அந்த கற்களின் மேல் ஹான்டில் பாரை நேராகப் பிடித்து சாயாமல் தள்ளிச்செல்ல மிகவும் சிரமப்பட்டு வேர்த்து விறுவிறுத்துப் போய்விட்டோம். ஆனல் இப்போது அலட்சியமாக நடந்துசென்ருேம். மோட்டார் சைக்கிளின் கைப்பிடியை வலமும் இடமும் திருப்புவதே எங்கள் பணி. வாகனம் பூனையைப் போல எங்களுடன் வந்தது. இவ்விதமாக ஒரு பர்லாங்கு தூரத்தையும் கடந்து வீடு வந்தோம். இப்படி எதிர்பாராத நேரங்களில் உதவி செய்த ஆவிகளின் உளப்பாங்கினை எண்ணிவியந்தோம்.

தொன்மைச் சிறப்புவாய்ந்த தஞ்சை மாநகரில் சாரட் சுப்பாராவ் சந்து என்ற வீதியில் வசிக்கிருர் ஒரு மீடியம். இவருடைய மனைவியும் ஒரு நல்ல மீடியம். (இவர் ஆவியுலகத் தொடர்பின் காரணமாக பில்லி சூனியம் - ஏவல் செய்பவர் என்ற தவருன பிரசாரத்திற்கு ஆளானவர். அரசாங்க அலுவலகம் ஒன்றில் உயர்அதிகாரியாகப் பணிபுரியும் இவர், தன்பெயரை வெளியிட விரும்பாததால் அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை மட்டும்சுருக்கித்தருகிறேன்)

ஒருசமயம் இவரிடம் ஆவிகள் வந்து பேசிக்கொண்டிருந்த போது அவருடைய மைத்துனிக்கு (மனைவியின் தங்கை) அடுத்த சிலதினங்களில் குறைப் பிரசவம் நடைபெறும் என்றும் அதைத் தடுக்க சிறந்த மருத்துவரிடம் காட்டி ஆலோசனை பெற்று சிகிச்சைபெற வேண்டும் என்றும் கூறினர். அதை இந்த மீடியம் தன் உறவினர்களுக்குக் கடிதமூலம் தெரிவித்தார். ஆனல் அவர்கள் அதை நம்பாமல் அசட்டையாக இருந்துவிட்டார்கள். ஒருவாரகாலத்தில் ஒரு நாள் ஆவிகள் திரும்பவும் அவசரமாக வந்து உடனே மருத்துவமனைக்குச் சென்று மைத்துனியைப் பார்க்குமாறு கூறினர்கள். மறுநாள் அதன்படிசெல்ல அப்போதுதான் குறைப்பிரசவம். ஆகியிருப்பதாக அறிந்தார்கள். மிகவும் சிரமமாகிவிட்டது. எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. கடவுள்தான் துணைஎன்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்களாம். இப்படி இவரும் இவர் மனைவியும் எதிர்பாராத நேரத்தில் மருத்துவமனைக்கு வந்தது அவர்களுக்கு ஆச்சரியத்தையும் அவர் கடிதத்தில் எழுதியுள்ளதுபோலவேநடந்து விட்டதே என்ற அதிர்ச்சியையும் அளித்தது. ஆவிகளின் முன்னறிவிப்பை நம்பாமல் போனேமே என்று மிகவும் வருந்தினர்கள். பிறகு ஆண்டவன் அருளால் இவர் மைத்துனி பிழைத்து எழுந்து நாச்சியார் என்ற ஊரில் நலமாக உள்ளார்.

---

## பாடசாலை நூலகங்கள்—(2)

# நூலகங்களை அமைத்தலும் நிர்வகித்தலும்

**கவிஞர் வி. கந்தவனம்**

**பா**டசாலை நூலகங்கள் தனியான கட்டிடங்களில் அமைந்திருத்தலே விரும்பத்தக்கது. காற்றோட்ட வசதியும் வெளிச்சவசதியும் கூடிய இடவசதியும் கொண்டு நூலகம் விளங்கவேண்டும். நூலகங்கள் வகுப்பறைகளைப்போல் இருத்தல் கூடாது. நெருக்கமான வகுப்பறையில் வசதியற்ற வகுப்பறையில் அதிக நேரம் இருந்துவிட்டு வரும் மாணவருக்கு வகுப்பறையிலும் பார்க்க முற்றிலும் வேருன அமைப்பினையுடைய நூலகமே நல்ல வரவேற்பை அளிக்கமுடியும். எனவேதான் கதிரைகள், மேசைகள் கூட வகுப்பறைக் கதிரை மேசைகளிலும் பார்க்க வேருன அமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று நூலக விற்பன்னர்கள் வலியுறுத்துவர். மாணவர் சாய்ந்திருந்துவசதியாகப் படிக்கக்கூடியவகையில் கதிரைகள் இருத்தல்வேண்டும்.

புத்தகங்கள், சஞ்சிகைகள் கவர்ச்சியாக வைக்கப்பட்டிருத்தல்வேண்டும். நூலகம் சம்பந்தமான அல்லது பிள்ளைகள் பற்றிய அல்லது அறிவினை வளர்க்கவல்ல வண்ணப்படங்கள் நூலகச் சுவர்களை அலங்கரித்தல் விரும்பத்தக்கது. சுவர்ப்பூச்சுக்கள்கூட வித்தியாசமாய் இருத்தல் நல்லது. சுருங்கக்கூறின், மணமும் நிறமுங்கொண்டு மலர்கள் வண்டுகளைக் கவர்தல்போல நூலகங்களும் அகமும் புறமும் அழகான அமைப்புக்கொண்டு மாணவர்களைக் கவர்தல் வேண்டும்.

நூல்களைப் பகுத்தலும் பதிதலும் நூலகவியலிற் கூறப்பட்டவாறு இருத்தல்வேண்டும். மாணவர்களுக்கு அதிகம் சிரமமில்லாதவகையில் நூல்களைக் கொடுத்துப் பெறல் வேண்டும். நீண்டவரிசையில் நெடுநேரம்காத்திருந்து நூலைப் பெறுதல், சாப்பாட்டு நேரங்களில் அல்லது வீட்டுக்குச் செல்லும் நேரங்களிற்ருன் நூல்களைக் கொடுத்துப் பெறல்வேண்டும் என்பன போன்ற நிலைமைகளைத் தவிர்த்தல் நல்லது.

நூலகங்களில் பயிற்றப்பட்ட நூலகர் ஒருவரை நியமித்தலே விரும்பத்தக்கது. அவர் இல்லாதவழி அல்லது அவரை நியமிக்க வசதியற்ற வழி ஆசிரிய நூலகர் ஒருவரை நியமிக்கலாம். நானூறு பிள்ளைகளுள்ள ஒரு பாடசாலையில் நூலக ஆசிரியருக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

---

## மழை பெய்ததே!!

கரிய முகிலொன்
றுருண்டு வந்து
பெரிய துடன்
சேர்ந்ததே!
பெரியதும் பெரிய துடன்
பேசிக் கலந்து
கொண்டதே!

அண்ட மதிர
மண்டை கலங்க
சண்ட ம(ா)ருதம்
பிறந்ததே!
கண்கள் கூச
பெண்கள் தோற்க
மின்னலும்
முன் வந்ததே!

அதிர்ந்த அதிர்ப்பில்
விதிர்ந்த வானும்
துளிர்த்தநீரை
உதிர்த்ததே!
ஊடல் கொண்ட
பெண்ணின் கண்போல்
வானமும் பிகு செய்ததே!

கொதித்த கணவன்
கோபமொழி போல்
மேகமும் சினந்ததே!
ஆற்றுனத்
துயரத்தாலே
துளிர்த்த நீரும்
பெருத்ததே!

பெய்ததே!
மழை பெய்ததே!!
பூமி குளிரப் பெய்ததே!!
பூதலத்தில்
மாந்தர் யாரும்
பூரிப்போடு வாழவே!

—கரவை ரகு

# நமது நூல் நிலையம்

## பலாத்காரம்

(சிறுகதைத் தொகுப்பு)
ஆசிரியர்: சி. இராஜசிங்கம் (சுதாராஜ்)
வெளியீட்டோர்; தமிழ் பணிமனை, யாழ்ப்பாணம்.

இன்றைக்கெல்லாம் பகலொரு கதை இரவு ஒரு கதையாக தமிழ்ஈழத்தில் சிறுகதைகள் உருவாகிக்கொண்டிருக்கிறன. அவற்றில் அநேகமாய் பாதியளவு எண்ணிக்கை பத்திரிகைகளில் பிரசுரமாகியும் அதன்பின் மலர்மாலை வண்ணமாய் நூலுருவில் தொகுக்கப்பெற்றும் கதை படிக்கும் வாசகர்களை மகிழ்விக்கும்.

'பலாத்காரம்' சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் கதைகள், பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம், நீர்ப்பாசன திணைக்களம், தொழிற் திணைக்களம், கலாசாரப்பேரவை- என்பன அவ்வப்போது நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசுக்குகந்த கதைகளாக முதன்மைத் தேர்வு பெற்றவையும், பிரபல ஞாயிறு வெளியீடுகள் தவிர்ந்த ஏனைய இலக்கிய சஞ்சிகைகளில் வெளிவந்தவையும், இவை யாதொன்றிலும் அரங்கேற்றம் ஆகாத ஒன்றிரண்டு கதைகளும் - என வகைப்படுத்தற்குரியன.

கொழும்புக்குப்போன நம்மாட்கள் அதாவது கொழும்புவாழ் தமிழ்மக்கள் கோட்டத்தில் கதாசிரியருக்குள்ள ஈடுபாடு ஐந்து கதைகளாக உருவாக்கம்பெறுகின்றன. நுணுக்கமாக நுணிதாக அவதானித்ததை சுசிதமாக, கவர்ச்சியாகச் சொல்லி நவயுக சிறுகதை இலக்கிய உத்தியாகப் 'பொடி' வைத்தும் புள்ளி போட்டும் கதைகளுக்கு முத்தாய்ப்பு வைக்கும் முறை நன்று. திரிபு, மயக்கம் என்றெல்லாம் தமிழ் இலக்கண நன்னூல்-மரபு தழுவ, விலக்கி வைப்பது இதுமாதிரி எழுதுவதை அல்ல என்றே நம்புகிறேன்!

பட்டணத்துத் தெருவீதியின் நடைபாதை ஓரத்தில் படுத்துறங்கி எழும் பிச்சைக்காரச் சிறுவனும், வீட்டுப் பணியாள் வேலையில் நலிவுறும் தோட்டக்காட்டுச் சிறுவனும், நாலு பிள்ளைகளைப் பெற்ற பின்னரும் படியடா என்றால் யாரால் படிக்கமுடிகிறது"- என முணுமுணுத்துக் கொண்டே மனைவி பிள்ளைகள் சூழ்ந்திருக்க சிங்களத் தேர்வுப் பரீட்சைக்குப் படித்து பலதரம் அதில் பாஸ் ஆகாமலே கோட்டை விடும் அரசகரும எழுத்தனும், வத்சலையும், திருவாட்டி சொர்ணம் தில்லைக் கூத்தனும், கொழும்பு-யாழ்ப்பாணம் கோச் பெட்டியில் சமயசந்தர்ப்ப மயக்கமாக ஒன்றுசேரும் தமிழ் பயணிகளும்- கதாசிரியர் பேனா முனையில் இனிதாகத் தோற்றி மறைவர்.

'எதிர்காலத்தில் பிரகாசிக்கப்போகும் ஓர் எழுத்தாளருக்கு ஒரு கட்டியம் இந்நூல்' என ''தேவன்'' நூல் முன்னுரையில் சிலாகித்திருப்பதை இங்கு யாமும் மீளக்கூறி ஆசிமொழிகுவம்.

நூற்றிப் பத்துப் பக்கங்களில் குணசிங்கத் (ரக்)தின் ஓவிய சித்திரிப்புடனே கலா நிலைய பதிப்பாக வெளிவந்திருக்கும் இந் நூலின் விலை ரூபா 4-15.

ஏ. எஸ். எம்.

## சைவசமய ஆய்வுரைகள்

ஆய்வாளர்: திரு. த. இராம நாதபிள்ளை பீ. ஏ., விலை ரூபா 5-00. இடைக்குமிடம்: த. இராமநாதபிள்ளை, தும்பளை, பருத்தித்துறை.

நூலாசிரியர் திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள் மேலைத் தேசத் தத்துவக் கொள்கைகளை நன்கறிந்தவர். ஆன்மா, ஐம்பொறிகள் முதலியன பற்றி சைவசித்தாந்தக் கொள்கைகளோடு மேலைத்தேசக் கொள்கைகளைப் பொருத்தி ஆராய்வதில் வல்லுனராக விளங்குகின்றார். உதாரணமாக ஐம்பொறிகள் ஆன்மா வல்ல என்னும் கொள்கையை சித்தியார் தெளிவுறக்கூறும். இதனை மேல்நாட்டு உளநூல் வல்லோன் ''மக்டுகல்'' என்பவரின் கொள்கையோடு பொருத்திக்காட்டுவதைக் கூறலாம்.

''நல்லொழுக்கத்துடன் கூடிய அறவாழ்க்கை நடத்துவோரே மக்களுட் சிறந்தோராவர்'' என்னும் ''அரித்தாதலின்'' வாக்கியம் படித்து உணர்தற்குரியது. ''நல்லொழுக்கம் என்னும் உலகில் இருந்து எப்பொழுதும் நல்வினை செய்தலே பரமநல்வினை'' என்னும் ஜெர்மனிய தேச நூல் வல்லோர்க்ருத்தும் சைவ சித்தாந்தக் கருத்தோடொப்ப எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது. ஆன்மா என்பது என்ன? அதன் தன்மைகள் என்ன என்பன ஆராய்வுள்ளத்துடன் நோக்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த நூலாசிரியரின் ஆய்வுள்ளம் சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி என்பவர்கள் கூற்றையும் மறுக்கமுனைகிறது. தமிழ்ப் புராணங்களிலே சேக்கிழார் பாடிய புராணம் வரலாற்றுச் சான்றுகள் நிறைந்த புராணம் என்பதே சைவச்சான்றோர் துணிபு. அதிலே ''இனிது புனைந்துரைத்தலுக்கு'' இடமில்லை.

''துறவியும் இல்லறம்செய்ய வேண்டும்'' ''மனையாள்இல்லாவிட்டாலும் இல்லறம் நடத்தலாம்'' என்னும் கருத்துக்கள் ஆய்வுக்குரியவை!

சரியை முதலாய நான்கு படிகளிலும் தியானமே உயிர் போன்றது. தியானம் இல்லாவிட்டால் எந்தப் படியிலும் ஒரு பிரயோசனமுமில்லை. மனவொடுக்கத்திற்கும் தியான வளர்ச்சிக்கும் அட்டாங்க யோகம் அவசியமானது. இந்த நிலையில் யோகம் என்பது தியானம் என்றும் அட்டாங்கயோகமல்ல என்னும் ஆசிரியர் கூற்று சிந்தனைக்குரியவை.

சிந்தனையைத் தூண்டும் கட்டுரை நூல்கள் இன்றைய சைவ உலகிற்கு அவசியம். அந்த நோக்கிலே இராமநாத பிள்ளையின் இந்த முயற்சி சிறந்தது என்பதற்கு ஐயமில்லை.

-வ. குகசர்மா.

## பணமோ பணம்

ஆசிரியர்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை B.A.
வெளியிடுபவர்கள்: அராலி சரஸ்வதி நாடகமன்றம்
விலை: ரூபா 2-50

எழுதவேண்டும் என்ற ஆர்வம் எழப்பெற்றவர்களெல்லாம் முதலில் எழுதத் தொடங்குவது சிறுகதைகளே. பின்பு நாவல்களில் கை வைக்கின்றனர். திறமை மிக்க எழுத்தாளரான பின்பும் கூட நாடகங்களின் பக்கம் எட்டிப் பார்க்கத் தயங்குகின்றனர் பலர். ஆனால் இப்பொது விதிகளுக்கு மாறாக திரு. ந. சுந்தரம்பிள்ளை எடுத்த எடுப்பிலேயே நாடகங்களை வெளியிடத் தொடங்கியுள்ளார். சென்ற ஆண்டு இவரது 'பொலிடோலே கதி' என்ற நாடக நூல் வெளிவந்தது. இப்பொழுது 'பணமோ பணம்' வெளிவந்திருக்கிறது. நீண்டகாலம் நாடகத்துறையில் உழைத்ததனால் ஏற்பட்ட அனுபவமே அவருக்குத் துணிவு கொடுத்திருக்க வேண்டும்.

எழுதத் தெரிந்த எவரும் சாதாரண கதை ஒன்று எழுதிவிடலாம். ஆனால் நாடகப் பண்புவாய்ந்த கதை எழுதுவது சற்றுச் சிரமமான காரியம். 'பணமோ பணம்' சுவையான கதை அம்சம் பொருந்திய நாடகம்.

"பணத்தை மதியாதே; மனிதனை மதிக்கவேண்டும்." இதுவே நாடகத்தின் மூலம் ஆசிரியர் கூற முன்வந்துள்ள கருத்து. இக்கருத்து மிகவும் பழைமையானதுதான். ஆனால் இக்காலத்திற்கு அது வேண்டியதில்லை என்று கூறிவிடமுடியுமா? முன் எக்காலத்தையும் விட இக்காலத்திற்கே இக்கருத்து மிகவும் அவசியம் என்று கூறவேண்டும்.

இக்கருத்தை விளக்குவதற்கு ஒரு ஏழைப் பல்கலைக்கழக மாணவனது கதையை எடுத்துக்கொண்டிருக்கிறார். நாடகத்தின் கதை, எமது நாட்டில், இந்த நூற்றாண்டின் ஆறாவது தசாப்தத்தில் நடைபெற்றதாகப் புனையப்பட்டுள்ளது, கதை நிகழிடங்கள், யாழ்ப்பாணமும் கொழும்பும். நாடக பாத்திரங்கள் நாம் அன்றாட வாழ்வில் சந்திக்கும் மனிதர்கள். ஒரு பாத்திரமாவது செயற்கைத் தன்மை வாய்ந்தது என்று கூற முடியாது. நாடகத்தின் கதையைச் சுவையும் விறுவிறுப்பும் குன்றாது வளர்த்துச் செல்லும் அதேவேளையில், அக்காலச் சமுதாய, பொருளாதார, அரசியற் சூழ்நிலையும் திறமையாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

காதலுக்கு முக்கியத்துவம் கொடுக்காது நாடகம் அமைத்துள்ளது ஆசிரியருக்கு ஒரு வெற்றி!

உரையாடல்களில் 'மண்ணின் மணம்' கமழ்கிறது; யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குத் தமிழின் சுவை சொட்டுகின்றது!

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் நாடகத்திற்கோர் அருமையான அணிந்துரை வழங்கியுள்ளார். ஆசிரியர் திரு. விசாகப்பெருமாள் அழகான முகப்புப் படம் வரைந்துள்ளார்.

திரு. ந. சுந்தரம்பிள்ளை பல நாடகங்களை எழுதி அரங்கேற்றியவர். 'பணமோ பணம்' நாடகத்தை வாசித்து முடிக்கும் பொழுது 'ஆசிரியரது ஏனைய நாடகங்களும் வெளிவந்தால் அவற்றால் தமிழ் வாசகர்கள் நிச்சயம் பயனடைவார்கள்' என்று கூறத்தோன்றுகின்றது.

—'செ'

## தமிழ்த் தாயின் கண்ணீர்

ஆசிரியர்: புத்தொளி. வெளியீடு: தமயந்திபதிப்பகம், அச்சுவேலி. விலை ரூ. 2, [illegible]

சில நினைவுகள் நெஞ்சைப் பிழிவதாக இருந்தாலும் அதனை மீட்டுப் பார்ப்பதில் ஏதோ ஒரு படிப்பினை இருக்கிறது. இந்த வகையில் சிறிதாக இருந்தாலும் 'தமிழ்த் தாயின் கண்ணீர்' ஏதோ ஒரு நினைவுத் தொடர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

''குத்து வெட்டு, துப்பாக்கிச்சூடு, தீவைப்பு... இந்த நாட்டில் நடந்த செய்திகளைக் கேட்கும் போதும் படித்திடும் போதும் நெஞ்சில் நெருப்பைக் கொட்டியது போல இருக்கின்றது''. ஆசிரியர் நூலின் ஆரம்பத்தில் எழுதியுள்ள இந்த வார்த்தைகள் நெஞ்சில் நினைவு வைத்திருக்க வேண்டியவை.

அந்தந்த நேரத்தில் தேவைக்கேற்ப அதிக லாபத்தைக் கருதாமல் நூல்களை வெளியிடுபவர் புத்தொளி. சுமார் பத்து தரமான நூல்களை வெளியிட்டுள்ள இந்த ஆசிரியரின் நூல் ஈழத்தின் வருங்கால சந்ததியினரின் சிந்தனைக்கும் கருவாக இருக்கும்.

''ஆவணி 16ம் திகதியிலிருந்து ஈழத்தில் என்ன நடந்துவிட்டது?'' என்று கேட்பவர்களுக்கு, அல்லது தெரியாமலிருப்பவர்களுக்கு இந்த நூலைத் தைரியமாகக் கொடுக்கலாம்.

அவசரமாக எழுதப்பட்டிருந்தாலும் ஏதோ ஒரு கொடுமையான சம்பவங்களைக் கொண்ட ஒரு சிறு சரித்திர நூலைப் படிப்பது போலிருக்கிறது.

—க. க.

## நட்சத்திர மாமா

சிறுவர்களை கவர்ந்திழுக்கும் படத்துடன், பழபழப்பான அழகிய அட்டையை தாங்கி வந்துள்ள 'நட்சத்திரமாமா' செப்-அக். இதழ் கிடைக்கப் பெற்றோம்.

சிறுசிறு கதைகள் மட்டுமின்றி சரித்திர, புராண, ஆராய்ச்சி, விஞ்ஞான கதைகளையும், சிறிய வசனங்களில் அடக்கி, சிறுவர்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவிதத்தில் பெரிய எழுத்தில் பக்கத்துக்குப் பக்கம் படங்களுடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

வாசிக்கத் தெரிந்த, வயதிற் குறைந்த பாலர்களும் படிக்கக் கூடிய விதத்தில் சில கதைகள் மிகமிக சிறிய கதைகளாக வெளியிடப்பட்டுள்ளன. சிறு பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், சிறுவர்களின் பொழுதுபோக்கு அம்சங்களும் இடம் பெறவேண்டியது அவசியமாகும்.

— கா.

---

எண்ணிலே வாழ்வு—2

# மூளையின் பலமே மூல பலம்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது ஔவையின் வாக்கு. ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்கு. எண்ணும் எழுத்தும் மனிதர்களுக்கு எவ்வளவு முக்கியமானதென நாம் உணரலாம். இருவரது வாக்கையும் நாம் கவனிப்போமானால் முதலில் எண் பின்பே எழுத்து என்பது புலனாகின்றது. இதிலிருந்து எண்களுக்கு ஒரு தனிச்சக்தி உண்டென்பதை அறியலாம். அதை அதற்குரிய எழுத்துக்களுக்கு வழங்கினால் அந்த

★ அண்ணன் ★

எழுத்துக்களும் சக்திபெற்றனவாகி மாறிவிடுகின்றன.

மனிதராகிய நாம் உலகிலே பிறந்து பல்லாயிரம் மக்களுடன் உறவாடி, உலகில் உயர்ந்து, உத்தமமர்களாக நல்லவர்களாக, நானிலம் போற்றுபவர்களாக வாழ்ந்து மீண்டும் மடிகின்றோம். மதிப்புள்ள வாழ்வில்தான் எத்தனை விபரீதங்கள், எம் வாழ்வில் இப்படியான எண்கள் விளையாடுகின்றன. உடல் மண்ணணிற்கும் உயிர் விண்ணிற்கும் செல்லவிருக்கின்ற போது இடைப்பட்ட வாழ்நாளை ஏன் எண்ணிற்கு அர்ப்பணிக்ககூடாது?

விதியை மதியால் வெல்லலாம். அறிவைக்கொண்டே அதிர்ஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். மூளைக்கு வேலை கொடுத்தால் வாழ வழி கிடைக்கும்: மூளை பலமே மனிதனின் மூலபலம் வேலையின்றி மூளையிருந்தால் ஏது ''புகழ்'' மாலை வருமா இல்லை மலர்க்கிரீடம் கிடைக்குமா? பெண்டன் பார்டல்டோ கூறியது போல் ஒருவன் வாழ்வில் அதிர்ஷ்டம் ஒருதடவை தான் கதவைத் தட்டும்.

### ஜாதகம் இல்லாமல் எதிர்காலம் அறியலாம்

ஜாதகம் உள்ளவர்தான் தம் எதிர்காலத்தை அறிய முடியுமென்ற நம்பிக்கையை வெறும் போலிவார்த்தையாக்கின்றது எண் ஜோதிடம். யாராவது தான் பிறந்த திகதியை தெரியாமல் இருக்க முடியாது. இதை அறிந்து கொண்டால், எண்ணிலே வாழ்வு உண்டென்பதை அறிந்துகொள்ளலாம். மனிதன் வருங் காலத்தில் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறான். நாம் என்றோ ஒரு நாள் நல்வாழ்வு வாழ்வோமென்று நம்பிக்கையில் உறுதியுடையவன். வருங்காலம் மலராவிடில் வாழ்க்கை சூனியமாகிவிடும். எண்ணிலே நம்பிக்கை வைத்தால் வாழ்வு வளமாகும்.

மக்கள் ஒன்பது எண்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட காரணத்தினால் சிலர் சிலரை அளந்துவிடுவர். ''அவரோடு பழகுவதில் நிதானம் வேண்டும்'' என எச்சரிக்கைசெய்யப் படுவதை காதால் கேட்கிறோம். ஒருவர் எண்ஜோதிடத்தை சரியாகப் புரிந்து கொண்டால் பிறரை அறிவது கஷ்டமிருக்காது.

### எண்ணிலே முதன்மை

எண்ணிலே முதன்மைபெற்றது ஒன்று. இது சூரிய ஆதிக்ககாரரைக் குறிக்கும். சூரியன் இவ்வுலகத்தின் ஜீவராசிகளுக்கு எவ்வளவு முதன்மைபெற்றதோ அதைப்போல முதன்மை பெற்றவர்களாக இந்த எண்காரராக அமைவதுண்டு பொதுவாக ஜூலை 21 முதல் ஆகஸ்டு 28 வரையுட்பட்ட காலத்தில் அல்லது மார்ச் 21 முதல் ஏப்ரல் 28க்குள் பிறந்திருப்பின் இவர்கள் அதிர்ஷ்டத்துக்குரியவர்கள். ஒவ்வொரு மாதத்திலும் 1, 10, 19, 28-ந் திகதிகளில் பிறந்திருப்பின் இவ்வாண்டும 28-ந் திகதியாயின நற்பலன் மத்திமமானது.

ஒன்று எண்ணில் பிறந்தவர்கள் புத்திசாலிகளாகவும் சுறுசுறுப்புடையவராயும் தன் கொள்கையில் தன்னம்பிக்கையுடன் செயல்படுபவராகவும், தன் கொள்கைகளில் விடாப்பிடியுடையவராகவும் காணப்படுபவர்.

இவர்கள் வெளியில் நற்பெயரும் குடும்பத்தில் பொதுவாக அவதூறும் உடையவர். தன் மனதில் எண்ணுவதை யாரிடமும் கூறமாட்டார். பிறர்க்கு உதவுவது தம்கடமையென எண்ணுபவர். ஆடம்பர சுகபோக வாழ்வை விரும்பபுவர். அதிக நண்பர்கள் இருப்பினும், ஒரு சிலருடன் மட்டுமே வாய்விட்டுப் பழகுபவர். காதல் வசைப்படுவதில் நிகரில்லாதவர்.

இவர்கள் அலைச்சலுக்கென்றே பிறந்தவர்களாததால் சும்மா இருந்தாலும் 'சுழி' இவர்களை விட்டு விடாது. எவ்வளவு வருவாயி

[7-ம் பக்கம் பார்க்க]

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p.m only
The long awaited full length documentary on the wonders of Colourful fascinating undersea world of the deep oceans in the glory of Eastman Colour.
**The Great Barrier Reef**
A must film for School children பள்ளிக்கூடப் பிள்ளைகள் பார்க்கவேண்டிய படம். சனி, ஞாயிறு 10-30, 2-30 பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட காட்சிகள்

**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30 9-45
யாழ். நகர்
போன்; 7642
கடைசிதினம் 16-10-77 (ஞாயிறு)
சிவாஜி கணேசன்
**எங்கள் தங்க ராஜா** (புதிய பிரதி)

**மனோஹரா** எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
**துணிவே துணை**

**ரிடோ** போன்; 7693
(யாழ். நகர்)
காலை 7-00 மணிக்கு காட்சி ஆரம்பமாகும்.
காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
எம். ஜி. ஆர். — லதா நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**

**வின்ஸர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
**அன்னக்கிளி**

**ராணி** ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

## மூளையின்......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தும் போதாது என்பதே இவர்கள் குறையாகும், தன்னைப்பற்றி மிகவும் பெருமையடித்துக் கொள்வதில் வல்லவர். பிறரால் கேலிசெய்யப்படினும் பின்னர் மதிக்கப் படுவார்கள்.

### பெரும் பொறுப்பு

ஒன்று எண்ணில் பிறந்திருப்பவர் வாழ்விலே உயர்ந்திருப்பதைக் காணலாம்.

இவர்கள் எங்கு தொழில் பார்க்கினும், தமக்குக் கீழ்ப் பலர் பணியாற்ற வேண்டுமென்ற விருப்புடையவர். நிர்வாகத்தில் புரட்சிகளை மேற்கொள்ளவேண்டுமென எண்ணுபவர். பொது இடங்களில் நியாயத்துக்குக் கட்டுப் பட்டவராக இருப்பார்.

பொதுவாக ஒன்று எண்ணிலே பிறந்த பெண்கள் குடும்பத்தை நன்கு நிர்வகிக்கும் திறமையுடையவராயும், கணவனிடத்தில் பக்தி விசுவாசமுடையவராயும், குடும்பத் தலைவருக்குச் சிறந்த ஆலோசகராகவும், சிக்கனமுடையவராகவும் இருப்பர்.

இவர்கள் எடுப்பான தோற்றமுடையவர். அதிகார வாக்குடையவர், வாழ்வின் முன் பகுதியில் சிறிது கஷ்டமிருப்பினும் பிற்பகுதியில் கீர்த்திமிக்க வாழ்வு அமையும்.

இவர்களுக்கு இருதயநோய், கண்நோய், தொண்டை வாய் நோய், பீனிசம், மனநோய் ஏற்படுவதுண்டு. இவற்றைக் குணமாக்குவதற்கு மாணிக்கம் அணிவதால் ஓரளவு நோய் பாதுகாப்படையலாம். அதிர்ஷ்டமுமடையலாம். இவர்கள் செம்மஞ்சல், சிவப்பு ஆகிய நிறங்களையே அதிகம் விரும்புவர்.

இவ்வெண்காரர்களுக்கு 4,8,1,2,7 எண்காரர் நண்பராயிருப்பர். 4 எண்காரர் உற்ற நண்பராக சுகதுக்கங்களில் பங்கெடுப்பார்,

**RIO** (Jaffna)
Daily 10-30, a.m. 4-45, 7-00, & 9-30 p.m.
**London Conspiracy**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45 10-00
சிவாஜி-பத்மினி நடித்த
**கோடீஸ்வரன்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
ஆனந்தன்-சச்சு
**வீரத்திருமகன்**

# ‘‘அகதிகளைக் குடியமர்த்த பண உதவி வழங்குக’’

## இந்தியப் பிரதமருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு ‘‘இலங்கைவாழ் இந்தியர்கள், இலங்கையில் உள்ள தமிழ்ப்பிரதேசங்களில் குடியேற இந்தியா பணஉதவி அளிக்கவேண்டும்.’’

இவ்வாறு லங்கா-பாரத ஒற்றுமை முன்னணி அமைப்பாளர் டாக்டர் ஆ. தர்மலிங்கம், இந்தியப்பிரதமர் திரு. மொராஜி தேசாய்க்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது: ‘‘இலங்கையிலிருந்து தமிழர்கள் நாடுகடத்தப்படலாகாது. இலங்கைவாழ் தமிழர்களை இந்தியாவில் குடியேற்ற இந்திய அரசாங்கம் சம்மதம் தெரிவிக்கக்கூடாது.

‘‘தமிழர்கள் பிரச்னையை ஒரு சர்வதேச பிரச்னையாக உருவாக்க லங்கா-பாரத ஒற்றுமை முன்னணி முயற்சிக்கும். (க-அ

## மண்வள நிபுணர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு கனடாவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற மண்வள விஞ்ஞான ஆராய்ச்சியாளர் திரு. ஜி. எப். பென்ற்லீ இம்மாதம் 16ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். கனடா, அல்பாட்டா பல்கலைக் கழக மண்வள விஞ்ஞானப் பிரிவு பேராசிரியரான இவர் யாழ்ப்பாணத்தில்உள்ள விவசாயிகள், விவசாய அதிகாரிகள், விவசாய மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடுவார்.

‘ஷண்சன்ஸ்’ விவசாய திட்டப் பண்ணையைச் சேர்ந்த திரு பி கே. பொன்னம்பலத்தின் அழைப்பின்பேரிலே இங்கு வரும் பேராசிரியர் யாழ். மாவட்டத்தில் மண்வளஆய்வு கூடம் ஒன்றை நிறுவுவது பற்றி ஆலோசனை நடத்துவார்.

17ம் திகதி திரு. பென்ற்லீ பத்திரிகையாளரைச் சந்தித்து உரையாடுவார். (இ)

## நவராத்திரி

கொடிகாமம், சனி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் நவாரத்திரி பூஜை நேற்று ஆரம்பமாகியது. விசேஷ அபிஷேகங்களும் பூஜைகளும் தினசரி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. [உ]

## பண்ணும்......

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

கிரந்த சாஸ்ட என்ற அடியும் இடம்பெறுகிறது. ஆலய அமைப்பில் கூட நிருத்தமண்டபம் இருந்ததை நாம் அறிவோம், ஆலயத்துக்கு அணித்தாகப் பல சமய நாடகங்கள் நடாத்தப்பட்டதை நாடக வரலாறு கூறுகின்றது. எனவே எமது சமயம் பரதம் நாடகம் என்பனவற்றை நனி சிறக்கப் போற்றியது என்பதை மறக்க முடியாது.

இருப்பினும் நடனத்தைப் பழிக்க, நாடகத்தை இகழ முன்வருகிறார்கள். சில சமயவாதிகள் கலைஞர்களின் கலை உணர்வுகளை கிள்ளி எறிந்து மட்டந்தட்டவும் கங்கணம் கட்டுகின்றனர். இந்நிலைக்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை. இவ்வேளை, ஒழுக்கமுள்ளவர் எழுத்துக்கு, சொல்லுக்கு, கலையாற்றலுக்கு ஒரு தனி எடையுண்டு’ என்ற கூற்றே ஞாபகத்துக்கு வருகிறது. கலைஞனுக்கு ஒழுக்கம் அவசியம். சங்கரதாஸ் சுவாமிகள், திரு. சம்பந்த முதலியார், டி.கே. சண்முகம், கலையரசு கே. சொர்ணலிங்கம் போன்றோர் ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம்கொடுத்த நாடகக் கலைஞர்கள். அறிஞர்கள். அறிஞர் பேர்னாட்ஷா புலாலுண்ணல், கொலை போன்றவற்றையே வெறுத்து சைவ உணவருந்தியவர். பகிரங்கமாகவே மதுவருந்தல், பண்பாட்டுக் குறைவாக நடத்தல், கலைஞர்கள் பற்றி தம் முன் தாம் புறங்கூறல், கற்றது கைமண்ணளவு என உணராது இறுமாப்புறுதல் இதனால் இடர்படல் போன்றவற்றால் கற்றவர்கள் கூட கலைஞர்களை எள்ளி நகையாடத்தான் செய்வர். பாடல் ஆடல் நடிப்பு போன்ற அபூர்வ அற்புத சக்திகளைக் கொண்ட கலைஞன் பண்பாட்டின் நிலைக்களனாகவும் மிஸிர முனைந்தால், மக்கள் மத்தியில் பக்குவமாக நடந்தால் அதுவே கலைகளை உயர்த்தும். பண்ணும் பரதமும் மக்கள் மத்தியில் பெரும் பயன் நல்கும்.

## நூலகங்களை......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளொன்றுக்கு ஒரு பாடநேரமாவது நூலகவேலைக்கு ஒதுக்கிக்கொடுத்தல் வேண்டும் என்ற திட்டம் பிரித்தானியாவில் நடைமுறையிலிருக்கின்றது. இத் திட்டத்தை பின்பற்றி எமது நாட்டிலும் ஆசிரிய நூலகர்களின் நூலக வேலைநேரத்தை வழக்கமான வேலைநேரத்துள் அடக்கலாமென்ற அங்கீகாரத்தைக் கல்விஅமைச்சு வழங்கியுள்ளது. அதுமட்டுமன்றி பிராந்தியக்கல்வி இலாகாக்கள் ஆசிரிய நூலகர்களுக்குக் காலத்துக்குக்காலம் பயிற்சிவகுப்புக்களையும் நடத்திவந்தன.

யாழ்ப்பாணத்தில் இப்படி ஒரு பயிற்சிவகுப்பு 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் 21-ம் திகதிகளில் இந்துக்கல்லூரியில் வடமாநிலக் கல்வியதிபதியால் ஒழுங்கு செய்யப்பட்டு பிரிட்டிஷ் கவுன்சில் நூலகர் திரு. ரசெல் பௌடன் (Russell Bowden) அவர்களால் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. எனினும் அதுபோன்ற பயிற்சி வகுப்பு அதன்பின்னர் நடாத்தப்படாதது வருந்தத்தக்கது.

எமது நாட்டிற் பல பாடசாலைகளில் நூலகங்கள் இல்லை. இதற்கான பிரதான காரணங்களாக [1] பணவசதியின்மை, [2] இடவசதியின்மை, [3] ஆர்வமின்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மாணவரின் அறிவுவளர்ச்சி, மனவெழுச்சி, ஆற்றல்வளர்ச்சி என்பவற்றில் அக்கறையுள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் நூலகத்தின் அவசியத்தை நன்குணர்வர்.

நூலகமில்லாதவிடத்து ஒன்றைக் கட்டுவதற்கு அரசாங்கத்தின் உதவியை நாடலாம். அல்லது பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உதவியைக் கோரலாம். மனமிருந்தால் வழியுண்டு. ஆதலால் நூலகம் ஒன்றைப்பாடசாலையின் ஓர் இன்றியமையாத பகுதியாகக் கருதி அதனை நிறுவமுயலுதல் அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் தலையாய கடனாகும்.

நூல்நிலைய அமைப்புப் பற்றியும் அதனை நிர்வகிக்கும் முறைபற்றியும் பின்வரும் நிலையங்களில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. பிரிட்டிஷ் கவுன்சில்
2. ஆசிய நிறுவனம்
3. ஐக்கிய அமெரிக்க செய்திச் சேவை (USIS)
4. இலங்கை நூலகச் சங்கம்
5. யாழ்ப்பாண நூல்நிலையம்
6. யாழ்ப்பாண வளாக நூல்நிலையம்

வெள்ளித்திரையின் வண்ணஜாலங்கள் தித்திக்கும் தேன் விருந்து
**ராஜா** - தினசரி 10-30, 2-15, 6-15, 9-45.
யாழ்நகர்
தேவேந்திரனின் அகந்தையும் தருவாசக முனிவரின் சாபமும் பாற்கடலில் நடந்ததோர் சோதனை! மந்திர மலையை மத்தாகவும் வாசுகி பாம்பை கயிறாகவும் பாற்கடலை அசுரர்கள் கடைந்ததோர் விந்தை!
இரண்யேஸ்வரனின் தம்பியை கொன்ற பரந்தாமனை ஒழித்துவிட நாளை எண்ணும் இரண்யேஸ்வரன்: இரத்தத்தின் உறவால் உருவாகிய பிள்ளை பிரகலாதனோ ஹரிபக்தன்- இவர்களுக்கிடையே கடும் போட்டி- முடிவு என்ன?
சீர்காழி கோவிந்தராஜன்
ஜெயசித்திரா, எம். ஆர். ராதா,
சௌகார்ஜானகி, எஸ் ஏ. அசோகன்
கே. ஆர். விஜயா, ஜெமினிகணேசன்,
எம். ஆர். ஆர். வாசு நடித்த
**தசாவதாரம்**

(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
கதை-வசனம்-டைரக்ஷன்: [வண்ணப்படம்]
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

# 'அகதிகள் சகலருக்கும் அரசு உதவுமென எண்ணவேண்டாம்'

## கொடித் தினத்தில் அமிர்தலிங்கம்

மாவிட்டபுரம், சனி

நம் மத்தியிலுள்ள அகதிகள் யாவருக்கும் அரசாங்கம் வாழ்வளிக்கும் என நாம் நினைத்துவிடக்கூடாது. பல தடவைகளில் அகதிகள் பிரச்சினை குறித்து நாம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டும் இன்னும் எதுவித தீர்க்கமான முடிவும் எடுக்கப்படவில்லை. ஆகவே நமது சகோதரர்களுக்கு நாம்தான் வாழ்வளிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்"

இவ்வாறு தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் நடைபெற்ற அகதிகள் கொடிதின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. பி. கனகசபாபதி தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அகதிகள் பிரச்சினையானது எமது மத்தியில் மட்டும் உள்ள ஒரு பிரச்சினையென நினைத்துவிடக்கூடாது. உலகநாடுகள் பலவற்றிலும் இப் பிரச்சினை உள்ளது. இப்படியான அகதிகளது பிள்ளைகள் தீவிரவாத எண்ணங்களுடன் வளர்ந்து விமானக்கடத்தல் போன்ற பயங்கர சம்பவங்களில் ஈடுபட நேரிடுகிறது. ஆனால் எமது சகோதரர்களை நாம் அந்த நிலைமைக்கு விட்டு வைக்கமாட்டோம்.

### 1 கோடி அகதிகள்

பங்களாதேஷ் சுதந்திரப் போராட்டத்திற்கு முன் அங்கிருந்து ஒரு கோடி மக்கள் அகதிகளாக இந்தியாவினுள் பிரவேசித்தனர். ஆனால் நமது தமிழ்ச் சகோதரர்கள் தாம் வாழும் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இன்று வடபகுதியில் உள்ள முகாம்களில் 4000 பேர் அகதிகளாக உள்ளனர். இதைவிட தமது உறவினர் வீடுகளில் எத்தனையோ அகதிகள் தங்கியுள்ளனர். இவர்களில் சிலருக்கு மட்டும் அரசு காணிகளை வழங்க முன்வரலாம். ஆனால் காணிகளை வழங்கினால் மட்டும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கமுடியுமா? அவர்கள் வாழ்வதற்கு வசதி வேண்டும். வருவாய்பெற தொழில் செய்ய வேண்டும். ஆகவே நம்முள் ஏராளமான பணிகள் குவிந்துகிடக்கின்றன. இதை இளைஞர்கள் உணர்ந்து செயலில் ஈடுபடவேண்டும். ஆத்திரத்தினால் அறிவிழந்து தவறான வழிகளில் ஈடுபட்டால் நமக்கே அது தீமையாகிவிடும்.

மகாஜனக்கல்லூரி ஆசிரியர் மாணவர்களிடையே சேகரிக்கப்பட்ட நிதியை கல்லூரி அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்ட தமிழர்புனர்வாழ்வுச் சபையைச்சேர்ந்த வைத்தியகலாநிதி எஸ். சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

பாதிக்கப்பட்ட எமது சகோதரர்களுக்கு உதவுவதற்காக இன்று நாம் நிதி சேகரிக்கின்றோம். இந்த நேரத்தில் இனியும் இப்படியொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு அகதிகளாக நம் சகோதரர்கள் ஆக்கப்படாத நிலையை ஏற்படுத்த நாம் முன்வரவேண்டும்.

நம்மிடையே மலையகத் தமிழர்-இந்தியத் தமிழர் என்ற பேதங்கள் இருக்கக்கூடாது. சகலரும் நமது சகோதரர்கள் என்ற நினைப்புடன் அவர்களுக்கு வாழ்வளிக்க முன்வரவேண்டும்.

ஆசிரியர் திரு. ஆறுமுகராசா உட்பட பலர் பேசினர். [இ]

# கொடித்தினம் பெரும் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாதிக்கப்பட்ட புனர் வாழ்வு சபை நேற்று கொடித் தினம் பெரும் வெற்றியளித்திருப்பதாக மேற்படி சபையின் தலைவர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் கூறினார்.

கொடித்தினத்தை யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத் தொகுதி பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனும், தெல்லிப் பழையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்தனர்.

இந்த கொடி விற்பனையில் சுமார் 2000 தொண்டர்கள் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்திலும் நல்லூரிலும பெரும எடுப்பில் வரவேற்பு இருந்ததாகக் கூறப்பட்டது.

# நில அளவையாளர் 40 பேர் ராஜினுமா!

கொழும்பு. சனி

கடந்த சில மாதங்களுக்குள் 40 நிலஅளவையாளர்கள் தங்கள் ராஜினமாக் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளதாகக் காணி விவசாய அமைச்சர் திரு. ஈ. எம். சேனநாயக்கா தெரிவித்தார்.

மகாவலித்திட்ட அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்கள் மாநாட்டில் காணி அமைச்சர் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இந்நிலைமை மிகவும் திருப்திகரமற்றதாகும். 38 வயதுள்ள இளம் நிலஅளவையாளர்கள் கூட ராஜினமா செய்துள்ளார்கள் என்று அமைச்சர் சொன்னார்.

இம்மகாநாட்டில் பங்கு பற்றிய மகாவலித்திட்ட சபைத் தலைவர், பொறியியலாளர்கள் திட்டங்கள் தயாரிக்கப்படு முன் ஆரம்பவேலைகளைக் கவனிக்க, நில அளவையாளர்கள் தட்டுப்பாடாக இருப்பதாகத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்தே அமைச்சர் சேனநாயக்கா நிலஅளவையாளர்களின் ராஜினமா பற்றிக் குறிப்பிட்டார்.

இப்படியான நிலைமையை தடுக்கசிலவழிவகைகளை எடுக்க வேண்டுமெனக் கூறிய அமைச்சர், முதலில் தமக்கு அறிவிக்காமல், எந்த நிலஅளவையாளரின் ராஜினமா கடிதத்தையும் ஏற்கவேண்டாம் என அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் கூறினார். (த-அ)

# வளாக மாணவனுக்கு ஜெர்மனியில் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் இனந்தெரியாத நபர்களால் கத்திக்குத்துக்கு இலக்காகிய யாழ். வளாக மாணவன் செல்வன் மத்துவெல சிகிச்சையின் பொருட்டு ஜெர்மனுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளார். இதற்கான ஒழுங்குகளை சர்வ வளாக மாணவப் பிரதிநிதிகள் கூட்டாக எடுத்து வருகின்றனர்.

கடந்த எட்டு மாதங்களாக கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டிருந்தும், அவரது இடுப்புக்கு கீழுள்ள உறுப்புகள் சுயமாக இயங்கவில்லையென வைத்திய அறிக்கைகள் தெரிவித்தன.

இதையடுத்து அந்த மாணவனை சிகிச்சைக்காக ஜேர்மனிக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக யாழ். வளாக மாணவர் மன்றத் தலைவர் செல்வன் வ. ஜ. ச. ஜெயபாலன் தெரிவித்தார். (கெ-இ)

## பணிக்கன்குளம் கொலை முயற்சி வழக்கு

# 1ம் எதிரிக்கு ஒன்றரை வருடம் 2ம் எதிரிக்கு ரூ100 அபராதம்

வவுனியா, சனி

பணிக்கன்குளம் கொலை முயற்சி வழக்கில் 1-ம் எதிரிக்கு ஒன்றரை வருட சிறையும் 2-ம் எதிரிக்கு 100 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பணிக்கன் குளத்தை சேர்ந்த காசிப பிள்ளை என்பவரை சுட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாக கந்தன் தியாகராசா, கந்தன் தர்மலிங்கம்ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவும் கவும், அவர்களைத் தாம் 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி கனகமனோகரனும் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினர்.

தீர்ப்பளித்தபோது நீதிபதி, எதிரிகள் சார்பில் ஆஜரான இரு இளம் சட்டத்தரணிகளும், மிகத்திறமையாக வழக்கை நடத்தியிருப்பதாகவும், சிறந்தமுறையில் தொகுப்புரைகளை நிகழ்த்தியிருப்பதா பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

விசாரணை முடிவில் ஜூரி சபையினர், எதிரிகள், சிறு காயங்கள் விளைவித்த குற்றங்களுக்கு, குற்றவாளிகள் எனத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதிபதி தீர்ப்பளித்தார். (க)

## சாவகச்சேரித் தொகுதியில்

# சகல வங்கிகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு

கொடிகாமம், ஞாயிறு

சாவகச்சேரி தொகுதியில் உள்ள சகலவங்கியிலும், ஆயுதம்தாங்கிய பொலிசார் காவல்புரிந்துவருகின்றனர்.

கைதடி இலங்கை வங்கிக்கிளையில் நடந்த கொள்ளையைத் தொடர்ந்தே மற்ற வங்கிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய இடங்களிலுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கிராமியவங்கிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்கோஷ்டியொன்று விசேட ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ளது. (க)

## வட இலங்கைச் சுதேச வைத்திய சபை

# அறிவித்தல்

வட இலங்கைச் சுதேச வைத்திய சபையின் முகாமையில் இயங்கிவரும், இலங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி (127. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)ப் பதிவாளர் திருமதி ஸ்ரீ ஜெயதேவி பஞ்சலிங்கம் தனது பதவிகளை 1-10-77-ல் இராஜினமா செய்து, கல்லூரி முகாமைச் சபையிலிருந்தும் விலகிக்கொண்டார். எனவே குறித்த கல்லூரிக்கும் அவருக்கும் எதுவித தொடர்புமில்லையென்றும், கல்லூரி சம்பந்தமாக அவருடன் கொள்ளும் எந்தவித தொடர்புகளுக்கும் கல்லூரி முகாமைச் சபை பொறுப்பல்லவென்றும், குறித்த கல்லூரியுடன் தொடர்புள்ள அனைவருக்கும், பொதுமக்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இத்தால் பகிரங்கப்படுத்துகிறோம்.

க. அருளானந்தம். பூ. ஆ. விசாகரத்தினம்
தலைவர் காரியதரிசி
7624

# செயற்திட்டம்

வவுனியா, சனி

வவுனியா மகா வித்தியாலய தேசிய உயர்கல்வி விஞ்ஞானப் பிரிவு மாணவர்களால் கழிவுப் பொருட்களில் இருந்து வாயு தயாரிக்கும் திட்டவேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான குழியை வெட்டும் சிரமதான வேலையை மேற்படி மகாவித்தியாலய அதிபர் திரு. கா. லோகசிங்கம் ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து குழிவெட்டும் வேலையை மாணவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

இது மேற்படி வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்திற்குத் தேவையான எரிவாயுவைப் பெற உதவியாகவிருக்கும் என்றும் இதற்கான உபகரணங்களை கைத்தொழிற் அபிவிருத்தித் திணைக்களம் வழங்குகிறது என்றும் கல்லூரி அதிபர் கூறினார். (இ)

# துப்பாக்கி முனையில் டாக்ஸி கடத்தல்

கொழும்பு, சனி

துப்பாக்கி முனையில் டாக்ஸி ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது.

மூன்று இனந்தெரியாத நபர்கள் மிரிஹானயில் வைத்து சில்வா என்ற சாரதியை துப்பாக்கிமுனையில் மிரட்டி இறக்கிவிட்டு டாக்ஸியைக் கடத்திச் சென்றுவிட்டனராம்.

இலக்கத்தகடு மாற்றப்பட்டு குற்றச் சம்பவங்களுக்கு இந்த டாக்ஸி பயன்படுத்தப்படலாம் என்று பொலிசார் கருதுகின்றனர். [உ]

# சர்வாதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரங்களையும் அது ஒப்படைக்கின்றது. எனவே இந்த அதிகார பகுப்பானது, அரச அதிகாரங்களைச் சர்வதிகாரம் கைப்பற்றிக் கொள்வதிலிருந்து முக்கியமான பாதுகாப்பை வழங்குகின்றது என்று திரு. சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிகாரத்தின் உயர் மட்ட கருவியாக ஜனாதிபதி இருக்கமுடியாது. சட்டவாக்க அதிகாரம் அவருக்கு இல்லை. இந்தப் பணியை பேரவையே செய்யும், ஆனால் இதை நிறைவேற்றும் பணி பற்றி அதற்கு அக்கறையில்லை. இதே சமயம் ஜனாதிபதிக்கு நீதி வழங்கும் அதிகாரம் இல்லை இதனை நீதிமன்றங்களே செய்யும் புதிய திருத்தத்தின் சாரம்சம் இது தான் என்கிறார் அவர்.

பொது நிதிகள் தொடர்பான அரசியல் சட்ட ஷரத்துக்கள் பற்றி குறிப்பிடுகையில் 84-வது ஷரத்தைச் சுட்டிக்காட்டியுள்ள திரு. சத்தியேந்திரா, பொது நிதிகள் மீது தேசிய அரசுப் பேரவையே பூரண கட்டுப்பாடு கொண்டதாய் இருக்கும், பேரவையினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்கீழ் அன்றி எந்தவித மான வரி, தீர்வை. அல்லது வேறு எதுவித வரியும் அறவிடமுடியாது. இது பேரவைக்குள்ள விரிவான அதிகாரங்களைக் காட்டுகிறது என்றார் திரு. சத்தியேந்திரா.

# மணிலா சென்றார்

பண்டத்தரிப்பு, சனி

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மணிலா நகரில் நடைபெறவிருக்கும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் கிளைச் சபையான அமலோற்பவ மரியநாயகியின் சபையைச் சேர்ந்த குருமாரின் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு சில்லாலை பங்குக் குரவர் அருட்திரு பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் விமான மூலம் பயணமானார்.

மணிலாவில் இக்கருத்தரங்கு இம்மாதம் 26-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து எட்டுத் தினங்கள் நடைபெறவுள்ளது. அகில உலக ரீதியில் நடைபெறும் இக்கருத்தரங்கில் இலங்கையின் சார்பில் பங்குபற்றும் தமிழ்க் குரவர் இவரே யாவர். (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் இவன்சேர்வில் ரேமலைவீதி 63-ம் இலக்கத்தில் [illegible] அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் [illegible] 16 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389. Registerd as News paper in Sri Lanka